1645

M. 1803. FEBRUARY 1928 Vol. V No 7

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
14 MAR 1928
MADRAS

லக்ஷ்மி

சொந்தக்காரர்கள்:

கே. எஸ். முத்தையா & கோ., சென்னை.

வருட சந்தா உள்நாடு ரூ. 2. வெளிநாடு ரூ. 2-8.

அமெரிக்கன் சில்க் - - - - - அங்கவஸ்திரம்

தூய்ய வெள்ளை, உடல் திக்கானபட்டு; தினசரி துவைத்து உபயோகிக்கலாம். வண்ணனுக்கும் போட்டு சலவை செய்யலாம். இருபக்கங்களிலும் அழகான குஞ்சம் கட்டியது. 5 முள நீளம் 40'' அகலம்

விலை ரூ. **6—8—0** தான்

கிடைக்கவில்லையே! என்றுவருந்தவேண்டாம். ஏற்கெனவே 70 நாட்களில் 5000 பட்டுகளுக்கு மேல் செலவாகியும், ஆர்டர்கள் இன்னும் குறைந்தபாடில்லை. ஒன்றுக்கு ஆர்டர் செய்து வாங்கியவர்கள் டஜன் கணக்காய் ஆர்டர் செய்கிறார்கள் என்றால், இதன் உண்மை நீங்களும் ஒன்று வாங்கினாலன்றி அறிய முடியாது. ஸ்டாக்கு குறைந்துவருவதால் முந்திக் கொள்ளுங்கள்!

முத்தையாவ்ஸ் பாபுலர் ஷர்ட்டுகள்

திக்கான உசத்தி டுயில், பால்போன்ற வெள்ளை, கைதேர்ந்த தையற்காரர்களைக் கொண்டு செய்த மனோகரமான கட்டிங், உறுதியான தையல், உறுதிக்கும் நீண்ட உழைப்புக்கும் உத்திரவாதம். காலருடனும், காலரில்லாமலும் கிடைக்கும். அழந்தளவுடன் ஆர்டர் செய்யுங்கள்.

நெ. 1	டுயில் ஷர்ட் 1-க்கு விலை	ரூ. 2—0—0.
,, 2	காக்கி ஷர்ட் விலை	ரூ. 2—4—0.
,, 3	இங்கிலீஷ் டுயில் ஷர்ட்	ரூ. 2—4—0.
,, 4	அமெரிக்கன் டோரியா	ரூ. 2—4—0.
,, 5	உசத்தி பாப்ளின் ஷர்ட்	ரூ. 3—8—0.

கே. எஸ். முத்தையா கம்பெனி,

தபால்பெட்டி 99, **சென்னை.**

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
14 MAR 1928
MADRAS

இனாம் ! இனாம் !!

முனையில் இரிடியம் உள்ள 14 Kt. தங்க நிப்பு போட்ட

Self filling பௌண்டன் பேனா இனாம்.



எங்கள் 18 காரட் ரோல்டு கோல்டு பின்புறம் விசித்திரவேலை செய்யப்பட்ட லீவர் பாக்கெட் கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேலே சொல்லியபடி பௌண்டன் பேனா இனாமாய் அனுப்பப்படும்.

கெடியாரம் விலை ரூ. **4-12-0.**

5 வருஷம் உத்திரவாதம். உடனே எழுதுங்கள்.

CANADIAN WATCH PEOPLE,
George Town, Madras.

நூதன ஜர்மன் எலக்டிரிக் விளக்கு.



இதை மேஜையின்பேரிலும் சுவற்றிலும் வைக்கலாம். இராத்திரியில் படுக்கையிலிருந்தபடியே இக்கயிற்றின் (Wire) உதவியால் இதை எரியவும் நிறுத்தவும் செய்யலாம். புயற்காற்று அடித்தாலும் அணையாது. விசேஷ காலங்களில் இதை வைத்தால் அதிசயத்தைப் பார்ப்பதற்கு ஜனங்கள் கும்பலாகக் கூடிவிடுவார்கள். மிக ஜாக்கிரதையாகப் பாக்கிங் செய்து அனுப்பப்படும்.

பாட்டரியுடன் லைட் விலை ரூ. **4-8-0.**

தபால் செலவு **0-8-0.**

தி பான்ஸி வாட்சு அவுஸ். 15, A பீட், ஜி. டி. மதராஸ்.

நல்ல சமயம் ! வாங்கத் தவறாதீர்கள் !

பாரீஸ் லேடிகளின் அழகிய போட்டோ படங்கள்.

இதில் பாரீஸ் லேடிகளின் அழகும் விநோதமும் காணலாம். பார்க்கப் பார்க்கத் தெகட்டாத கண் காக்ஷியாகும். படுக்கை யறையில் ஜோடிக்க வெகு சுந்தரமாயிருக்கும். உண்மையான பாரீஸ் படங்கள் நம்மிடந்தான் உண்டு.

பல ரகமுள்ள 1 டஜன் செட்டுக்கு ரூ. **3-0-0.**

பாரீஸ் எம்போரியம்,

ஜி. டி. மதராஸ்.

காலத்திற்கேற்ற நூல்!   காதலர்கள் தேடும் நூல்!

நீங்கள் நெடுநாட்களாய் எதிர்பார்த்திருந்த

இரகசிய புஸ்தகம் தயாராகி விட்டது!

இல்வாழ்க்கையின் - -

- - - இரகசியங்கள்

சுமார் 400 பக்கங்கள் கொண்ட பெரிய புத்தகம்.

அழகான பயிண்டு.   நேர்த்தியான அச்சு.

விலை ரூபா **2—0—0.**

இந்நூலில் அடங்கியுள்ள விஷயங்கள்.

துறவிகளின் கதியென்ன?

இல்வாழ்க்கை ஏன் சிறந்தது?

இல்லறத்திலிருந்து மோக்ஷ மடைவதெப்படி?

பெண்ணின் பெருமை, பெண்கல்வி.

நாணம் எப்படி உண்டாயிற்று?

நாணமுள்ள ஸ்திரீயே அதிக இன்பந் தரக்கூடியவள்.

நாம் ஏன் உடைதரிக்க வேண்டும்?

நிர்வாணமாயிருப்பதின் தத்துவ மென்ன?

ஒவ்வொரு தேசத்திலும் கலியாணங்கள் எப்படி நடைபெறுகின்றன? உண்மையான கலியாணம் எது?

காதல் என்றால் என்ன? காதலுக்கும் காமத்திற்குமுள்ள வித்தியாசம்.

சாந்தி முகூர்த்தத்தில் எப்படி வெற்றியடைவது?

மனைவிகளைக் கணவன்மார் எப்படி வசியப்படுத்துவது?

கணவன்மாரை மனைவிகள் எப்படி வசியப்படுத்துவது?

தமக்குச் சரியான ஸ்திரீ அல்லது புருஷன் என்று எப்படிக் கண்டுகொள்வது?

ஸ்திரீகளுக்கு எப்பெப்பொழுது காமம் உண்டாகிறது?

அவர்களிடத்தில் அமிர்தநிலை எங்கெங்கே இருக்கிறது? அதை எப்படி நிலை பெயர்க்கிறது?

P. T. O.

பலஜாதி ஸ்திரீகளின் லட்சணங்கள்.

சங்கமம் செய்யவேண்டிய நாளும் நாழிகையும்.

ஸ்திரீ புருஷர்களின் மர்ம அங்கங்களின் அமைப்பும் அவைகளின் நேர்மையான உபயோகமும்.

ருதுவாவதின் மர்மம் அல்லது மாதவிடாய் என்பதன் தத்துவமென்ன?

சங்கம காலத்தில் கடிப்பது, கிள்ளுவது, தலைமயிரைப் பிடித்திழுப்பது இன்னும் பல தொழில்களால் அதிகமான இன்பம் பெறல்.

மனம்போல் மக்களைப் பெறும் அரிய உபாயங்கள்.

கர்ப்ப காலத்தில் ஸ்திரீகள் நடந்து கொள்ள வேண்டிய முறைகள்.

சுகப்பிரசவத்திற்கு வேண்டிய மார்க்கங்கள். பிரசவித்த குழந்தையைப் பிரசவகாலத்தில் ரக்ஷிக்கும் சிரமம்.

முதல் மாதத்திலிருந்து கடைசிமாதம் வரையில் சிசுவின் வளர்ச்சித் தத்துவம்.

ஸ்திரீகள் மலடாவதுண்டா? உண்டானல் அதற்குக் காரணம்? அதைப் போக்கடிக்கும் விவரம்.

புருஷர்கள் மலடாவதுண்டா? எங்கு பார்ததாலும் ஏன் ஆண்மலடு விசேஷமாயிருக்கிறது? இதைப் போக்கிக் கொள்ளுவதெப்படி?

அதிகமாகக் குழந்தைகள் பிறப்பதினல் நாட்டுக்கு நன்மையா, தீமையா? தீமையாயின் அதைத்தடுக்க உபாயம் என்ன? ஸ்திரீ புருஷர்கள், சேர்க்கையைத் தவிர்க்காமல் குழந்தைகள் - பெறுவதை மட்டும் தடுக்க முடியுமா? அமெரிக்கா, பிரான்ஸ், இங்கிலாந்து, ஜப்பான், சைனு, துருக்கி முதலிய விடங்களில் குழந்தை பெறும் விஷயத்தில் ஜனங்கள் என்னென்ன அநியாயங்கள் செய்கின்றனர்? சிசுகொலை அநியாயம்.

நண்பர்களே! இதுகாறும் சொல்லிவந்த விஷயங்களல்லாமல் இன்னும் எத்தனையோ நூற்றுக்கணக்கான பொன் போன்ற இரகசிய விஷங்களை இந்நூல் தன்னகத்தே கொண்டிருக்கிறது.

வாஸன் புஸ்தகசாலை,

தபால் பெட்டி 119,

97, அண்ணுபிள்ளை தெரு, ஜி. டி. மதராஸ்.

தென்னிந்தியாவில் நிகரற்ற,

ஆதிபரிமளச்சாலை.

(1800-ம்-ஞு ஸ்தாபிக்கப்பட்டது)

இது இராஜக்கள், ஜமீன்தார்கள். கோடீஸ்வரர்கன் ஜனத்தலைவர்கள் டாக்டர்கள், வியாபாரிகள் முதலியோரால் ஆதரிக்கப்பட்டது.

K. தாவுத் ஸாஹிப்.

இவர், அனேக கண்காக்ஷிகளில் தங்கம், வெள்ளி மெடல்கள் பரிசளிப்பும் நற்சாக்ஷிப் பத்திரங்களும், சென்னை எச். ஈ. தி. கவர்னரவர்களின் நன்கு மதிப்பும், அநேக கனவான்களின் நற்சாக்ஷி சோதனை பத்திரங்களும் பெற்று மான் மார்க்கு அடையாளமுடன் அடியிற்கண்டுள்ள சகல வாஸனை திரவியங்களால் நற்கியாதியும் பெற்றவர்.

வாஸனை சாமான்களின் விபரம் : உலகப்பிரசித்திபெற்ற,

ஆதி சந்தனாதித் தைலம்.

இது மூளைக்காசாரமானது. ஜெகத்தோர் மெச்சும்,

அரைக்கீரைவிதைத் தைலம்.

இது பித்தோஷ்ண நிவாரணி.

இவையன்றி, மேலானவாசனை யுள்ளவைகளாவன:—ஜவ்வாது, புனுகு, அறகஜா, அம்பர், பலவித வில்லை தினுசுகள், தூரதேச அத்தர் வகைகள், கஸ்தூரி, அம்பர், ஜவ்வாது பன்னீர், புனுகு அகர் முதலிய பத்தி தினுசுகள், மேல்நாடுகளின் ஸெண்ட் தினுசுகள், கூந்தல் வளர் தைலங்கள், பன்னீர் வகைகளும், சந்தன வில்லை, பச்சைக் கற்பூரம், குங்குமப்பூ, கோரோசனை. அற்புத பற்பொடி, சந்தனப் பவுடர், கேஸரி பவுடர், தஸாங்கம், விலைக்கேற்ற கலப்பு சந்தனம், குல்கந்து பருவு நிவாரணி, வாசனைப் பாக்கு. சுண்ணாம்பு, கொப்பரைச் சீவல், ஸ்நானப் பவுடர், தங்கம் வெள்ளி ரேக்கமைந்த ஏலங் கிராம்பு வகையறா, சுருள் நைஸ் கொட்டைப் பாக்கு சீவல், மதுரைப்பிள்ளை ஊறுகாய் முதலியவைகள் மான் மார்க்கு அடையாளமுடன் எங்களிடம் கிடைக்கும்.

விபரமான காட்லாக் தேவையானால் கிடைக்கும், பல இடங்களில் தகுந்த ஏஜண்டுகள் தேவை. ஒருமுறை வாங்கி பரீக்ஷித்துப் பாருங்கள்,

K. தாவுத் ஸாஹிப் அண்டு ஸன்ஸ்,

தந்தி விலாசம் :—“ஸெண்ட்மால்.”

ஆதிபரிமளச் சாலை, 311, பெரியகடைத்தெரு, கும்பகோணம்.

ஓம்

லக்ஷ்மி

தமிழர்களின் முன்னேற்றத்தைக் கருதி

பிரசுரித்து வரும்

ஓர் உயர்தர மாதப் பத்திரிகை

பத்திராதிபர் : K. S. முத்தையா

மலர் 5.	பிரபவஹூ மாசிமீ **1928** பிப்ரவரிமீ	இதழ் 7.

அட்டவணை.

பக்கம்.

1. லக்ஷ்மி துதி 303
2. தொழில் 304
3. கல்வியும் மகாபிமானமும் 305
4. அஷ்டாவதானி 310
5. பத்திரிகாலயம் 321
6. நட்டாஜி அல்லது சிவாஜியின் சேனைத்தலைவன் ... 325
7. மதுசாரம் 338

சந்தா நேயர்களுக்கு

10376

முக்கிய கவனிப்பு.

நமது "லக்ஷ்மி" ஒவ்வொரு இங்கிலீஷ் மாதம் 30-ந் தேதியிலும் வெளியாகும்.

எப்பொழுது சந்தா நேயர்களாகச் சேர்ந்தாலும், அந்தந்த மலரின் முதல் சஞ்சிகையி லிருந்தே அனுப்பப்படும்.

பத்திரிகை நேயர்களுக்குக் கிடைக்க வேண்டிய குறிப்பிட்ட தேதியில் கிடைக்காவிட்டால் உள் நாட்டு நேயர்கள் 10-ந் தேதிக்குள்ளும், வெளி நாட்டார் 15-ந் தேதிக்குள்ளும், சந்தா நம்பருடன் ஆபீஸுக்குத் தெரிவிக்க வேண்டும்.

சந்தா நேயர்களாயிருப்பவர்கள், எவ்விஷயத்தைப்பற்றி ஆபீஸுக்கு லெட்டர் எழுதினாலும், சந்தா நம்பருடன் எழுத வேண்டும். சந்தா நம்பர் லக்ஷ்மியின் விலாசக் கவரில் குறிப்பிடப்பட்டிருக்கும்.

நேயர்கள் இடம் விட்டு இடம் மாறினால், மாறுதல் விலாசத்தை, 25-ந் தேதிக்குள், சந்தா நம்பருடன் தெரிவிக்க வேண்டும.

லக்ஷ்மிபால் அன்பு கொண்டுள்ள நேயர்கள் தங்கள் பந்து மித்திரர்களையும், லக்ஷ்மிக்கு சந்தா நேயர்களாகச்சேர்த்துவிடக் கேட்டுக்கொள்கிறோம்.

மானேஜர்

லக்ஷ்மி ஆபீஸ்,

தபால்பெட்டி, 99. சென்னை.

லக்ஷ்மி துதி

நல் குர வஞ்சி நளிர்கடல் சூழ்ந்த
நானிலத் தோர்க்

கொல்கு மென்னைக் ககனத்தாரும் போற்றி
இசைத் துன்னச் செய்வாய்

பல் குருவாயர சாய்ப் புவி காக்கும்
பகவானுரு

கல்குலம் போரு கப்பாவாய் நின்றண்
ணருட்காக்க முண்டே

3L
N28.5.7

தொழில்.

1. இரும்பைக் காய்ச்சி உருக்கிடு வீரே !
யந்திரங்கள் வகுத்திடு வீரே !
கரும்பைச் சாறு பிழிந்திடு வீரே !
கடலில் மூழ்கிநன் முத்தெடுப்பீரே ;
அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயிரந் தொழில் செய்திடு வீரே !
பெரும்புகழ் நுமக்கே யிசைக் கின்றேன்.
பிரம தேவன் கலையிங்கு நீரே !

2. மண் ணெடுத்துக் குடங்கள் செய்வீரே !
மரத்தை வெட்டி மனைசெய்கு வீரே !
உண்ணக் காய்கனி தந்திடு வீரே !
உழுது நஞ்செய்ப் பயிரிடு வீரே !
எண்ணெய், பால்நெய் கொணர்ந்திடு வீரே !
இழையை நூற்றுநல் லாடைசெய் வீரே !
விண்ணி னின்றெமை வானவர் காப்பார்
மேவிப் பார்மிசைக் காப்பவர் நீரே !

3. பாட்டுஞ் செய்யுளுங் கோத்திடு வீரே !
பரத நாட்டியக் கூத்திடு வீரே !
காட்டும் வையப் பொருள்களின் உண்மை
கண்டு சாத்திரம் சேர்த்திடு வீரே ;
நாட்டிலே யறம் கூட்டி வைப்பீரே !
நாடும் இன்பங்கள் ஊட்டி வைப்பீரே !
தேட்ட மின்றி விழியெதிர் காணும்
தெய்வ மாக விளங்குவீர் நீரே !

—பாரதி.

கல்வியும் மதாபிமானமும்

(ஸ்ரீமான் நா. இலக்குமணப் பெருமாள் எழுதியது)

இவ்வுலகில் மக்களாய்ப் பிறந்த ஒவ்வொருவரும் அடையற்பாலதாகிய அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நால்வகைப் பயனையும் ஈதற்குத் திறமுடையது கல்வியே யாகும். இக்கல்வியானது தொடங்குங்கால் துன்பமாய் இருப்பினும் பின்னர் பெரிதும் இன்பமே பயக்கும் மாண்புடைத்து. இக்கல்வியின் பயனானது,

"உற்றுழி உதவியு முறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்ற னன்றே
பிறப்போ ரன்ன உடன்வயிற் றுள்ளுஞ்
சிறப்பின் பாலாற் றாயு மனந்திரியு
மொருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளு
மூத்தோன் வருக வென்று தவரு
னறிவுடை யோனு றரசுஞ் செல்லும்
வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளுங்
கீழ்பா லொருவன் கற்பின்
மேற்பா லொருவனு மவன்கட் படுமே'

என்னும் புறநானூற்றுச் செய்யுளால் நமக்குத் தெள்ளிதில் புலப்படா நிற்கும்.

பூர்வீக காலத்திலே நமது இந்திய மாணவர்களுக்குக் குருகுலக் கல்வியே போதிக்கப்பட்டது. அதாவது மாணவர்கள் பெற்றோர்களை விட்டுப் பிரிந்து தனியாக ஓரிடத்தில் இலை, கொம்பு முதலியவாற்றான் கட்டப்பட்ட சாலைகளில் ஆசானுடன் இனிது வீற்றிருந்து கல்வி கற்றார்கள். மாணவர்களுக்குக் கல்வி போதிப்பதற்காக,

'குலனருள், தெய்வங் கொள்கை மேன்மை
கலைபயில் தெளிவு கட்டுரை வன்மை
நிலமலை நிறைகோல் மலர் நிகர் மாட்சியும்
உலகிய வறிவோ ருயர்குண மிணையவும்'

ஒருங்கே அமையப் பெற்ற ஆசானையே ஏற்படுத்தி வந்தார்கள் அக்காலத்து மாந்தர். இத்தகு நிறைகுண மாந்தரை ஆசானாகப் பெற்ற மாணவர்களின் இருதயமானது, தெய்வபக்தி நிறைந்ததாகவும், கலைமகள் நடம்பயில் இடமாகவும் திகழ்ந்தது. ஆசான்,

காலமு மிடனும் வாலிதி னோக்கிச்
சிறந்துழி யிருந்துதன் தெய்வம் வாழ்த்தி
உரைக்கப்படும் பொரு ளுள்ளத் தமைத்து
விரையான் வெகுளான் விரும்பி முகமலர்ந்து
கொள்வோள் கொள்வகை யறிந்தவ னுளங்கொளக்
கோட்டமில் மனத்தின் நூல் கொடுத்து

வந்த காரணத்தால் மாணவர் பாடங்களை இலகுவில் அறிந்து வந்தனர். விரையாது, வெகுளாது விரும்பி முகமலர்ந்து இருந்த வகையினால் மாணவர்களுக்கு குருவினிடத்தில் பக்தி மேலீட்டு வந்தது. இத்தகு கல்வியினால் தான் நம் நாடானது பண்டைக் காலத்திலே, மற்றைய நாடுகளில் எல்லாம் அஞ்ஞானம் தலைவிரித்தாட, தான் மாத்திரம் அறிவுச் சுடராய்த் திகழ்ந்தது. முற்காலத்து பயிலப்பட்டு வந்த கல்வியானது தெய்வ பக்தி, குருபக்தி, தாய்தந்தையர் பக்தி முதலியவற்றை மாணவர்களுக்கு ஊட்டிவந்தது. கல்வியை ஒரு கடவுளாகவே நம்முன்னோர்கள் போற்றி வந்தனர். மதசம்பந்தம் திகழ்ந்த கல்வி உடைய அறிஞர்களிடம் ஈச்வர அருள் பொலிந்தது. இதனால் நாடெங்கும் மத உணர்ச்சியே மலிந்து விளங்கியது.

ஆனால் இக்காலத்திலோ நிலவும் மத உணர்ச்சியைப் பற்றிக் கூற வேண்டாம். கல்விச்சாலைகளில் மதசம்பந்தமான கல்வி போதிக்கப் படுவதே இல்லை. முன்னர் கூறப்பட்ட 'காலமு மிடனும்' என்ற செய்யுளின் இலக்கணத்திற் கொப்ப யாதொன்றும் கவனிக்கப் படுவதில்லை. மேனாட்டிலே காலையில் பதினொரு மணிக்குத்தான் மனிதர்கள் சுறு சுறுப்புடன் வேலைகள் தொடங்க முடியும். நம் நாட்டிலோ அச்சம

யத்து கதிரவன் தன்னுடைய கொடிய கிரணங்களை வெளியிடுகின்றான். வெயிலில் அவதியுற்று மாணவர்களும் உபாத்தியாயர்களும் பள்ளியுள் புகுகின்றார்கள். வெயிலால் அவதியுற்றதின் காரணமாக இருவரிடத்தும் கோபமே திகழ்கின்றது. ஆசானே 'விரையாது வெகுளாது முகமலர்ந்திருக்க' முடியவில்லை. இதனால் 'கொள்வேன் கொள்வகை யறிந்தவ னுளங்கொள' பாடங்கற்பிக்க இயலுவதில்லை. கடவுள் வாழ்த் தென்ப அவர்கள் கனவிலும் கருதியிரார். இக் காரணங்களால் மாணவ ரிடத்து, தெய்வ பக்தி குருபக்தி முதலியன புகுதலில்லை. இக்கல்வி யானது வயிறு வளர்ப்பதற்கான பலவழிகளைச் செப்புவது என்று கூறின் அது பொய்யுரை ஆகாது. கல்வி கற்று முடிந்து, கல்விமான் என்று இக் காலத்து கருதப்படும் ஒருவனை நோக்குமின். அவனிடம் ஏதாவது மத ஞானம் பொலிகின்றதா என்பதை கவனியுங்கள். ஒன்றும் இரா யென் பது திண்ணம்.

நமது மதத்தை விட்டு பிறமதங்களை உற்று நோக்குமின். கிருஸ் தவமாணவர்கள் வாரம் ஒருமுறை ஆதித்த வாரத்தன்று வேதக் கோயில் சென்று அங்கு பாதிரியார் மதஞானம் போதிப்பவைகளை ஏற்று இல்லம் திரும்புகிறார்கள். மகம்மதியர்களோ தங்கள் மாணவர்களுக்கு முதலில் குரான் கற்பித்த பின்னரே மற்றப் பாடங்கள் கற்பிக்கின்றார்கள். இத னால் அம்மாணவர்கள் மத உணர்ச்சி உடையவர்களாக வளர்கின்றார்கள். ஆனால் நம்மாணவர்களுக்கோ அம்மாதிரி யாதொரு சந்தர்ப்பமும் இல்ல வே இல்லை. பெற்றோர்களும் உபாத்தியாயர்களும் மதக்கல்வியின் அவசியத் தைப் பற்றி உணர்வதே இல்லை. இக்காரணத்தான் நம்மாணவர்களுக்கு நம்மதத்தின் உன்னத கொள்கைகள் ஒன்றும் தெரியாது. பிறமதத் தான் ஒருவன் சமய சம்பந்தமாக ஒரு கேள்வி கேட்டால் மதஞான மில்லாத இவர்கள் ஆந்தைபோல் விழிக்கின்றார்கள். அதுகண்ட பிற மதத்தான் "பார்த்தாயா, நின்மதத்தில் ஞானசம்பந்த மானவை நிரம்பிக் கிடக்கவில்லை" என்று கூறித் தங்கள் மதசம்பந்தமானவற்றை உயர்வு நவிற்சியாக சில புகல்வான். இதனால் சில மாணவர்கள் தங்கள் மதத்தை விட்டு பிறமதம் புகுகின்றார்கள்.

ஒருவன் கல்வி கற்பதெல்லாம் அதனால் தானும், தன் உற்றார் பெற் றாரும், தன் நாடும் தன்மதமும் முன்னிலை அடையச் செய்விப்பதற்கா கவே. நமது நாட்டில் கல்விப் பயிற்சியின் முக்கியாம்சமாக சமயக் கல்விகருதப்பட்டு வந்த காலத்திலே ஜன சமூகம் விசேட

அபிவிருத்தி அடைந்திருந்தது. சமய அறிவும், ஆராய்ச்சியும். ஒழுக்கமும் குன்றிய பின்புதான் நமது சமூகம் சீர்குலைய ஆரம்பித்தது. மதஞானம் இல்லாத கல்வி சந்திரனில்லா வானம்போலும், தாமரையில்லாத்தடாகம் போலும் அழகில்லாத தொன்றும். கல்வியின் முதற் பயன் மதஞானமே யாகும். அது இல்லாவிடின் கற்றது கல்வியன்று. இது பற்றியே வள்ளுவனூர்.

"கற்றதனலாய பயனென்கொல் வாலறிவன்
நற்ரு டொழா அ ரெனின்"

என்று இயம்பினர்.

அதாவது ஒருவன் கற்றவனுயிருந்தும் எல்லாம் வல்ல இறைவனை வழிபடான் என்னின் அவன் கற்ற கல்வி பயனுடைத்தன்று என்பதே. இக் கருத்தை ஒப்பவே

'கற்றதுங் கேட்டதுந் தானே யேதுக்காக
கடபடமென் றுருட்டுதற்கோ கல்லா லெம்மான்
குற்றமறக் கைகாட்டுங் கருத்தைக் கண்டு
குணங்குறியிற் றின்பநிட்டை கூட வன்றோ'

என்று இசைத்தனர் தாயுமான சுவாமிகள்.

கல்வியறிவுடையார் யாவர் என ஆராயப் புகின், இக்காலத்து கற்றறிந்தோர் எனக் கருதப்படும் பட்டதாரிகள் அல்லர். பின்னர் யாவர் எனின்:

பொருலில் லாவிதி காச புராணங்கள்
தெருளு மாந்தர் சிறப்புள ராகுவர்
தரும நூலும் புராணத்தின் றன்மையுங்
கருதி யோர்ந்தவ ரேகலை வல்லரே

என்னுங் கூர்மபுராணச் செய்யுளை இயைய மதத்தினுக்கு அணியாய் விளங்கிடு இதிகாசம் புராணம் தருமநூல் முதலியவைகளை மறுவறக் கற்றவர்களே கற்றுத் தெளிந்தவராவர்.

கல்வியும் மதாபிமானமும்

1. ' கல்லா நெஞ்சில் நில்லான் ஈசன் '

2. ' கல்லாதார் காண்டிற் கரியானை '

3. ' கற்றவர் தொழுதேத்துஞ் சீர்க்'
கரையூரிற் பாண்டிக் கொடுமுடி
நற்றவா உனைநான் மறக்கினுஞ் சொல்லுநா
நமச்சி வாயவே'

4. ' கற்றல் கேட்டலுடையார் பெரியார் கழல்
கையாற் றொழு தேத்தப்
பெற்ற மூர்த்த பிர மாபுர மேவிய
பெம்மா னிவனன்றே'

என்னும் தேவாரத்திருப்பதிகச் செய்யுள் பகுதிகளை ஆராயின், மத ஞானம் இல்லார் கற்றோர் எனக்கருதப் படார்; இறைவன் இனிது உறையுமிடம் கற்றவர்கள் இருதயங் கோயிலே, என்பவைகள் நமக்குப் புலப்படுகின்றன.

இப்பூவுலகெங்கும் பரந்து கிடந்த அஞ்ஞான இருளை அறவே ஓட்டி ஞானஒளி பரப்பியதும், ஆன்ம ஞானம் தலைசிறந்து விளங்கியதுமாகிய நம் நாடானது இக்காலத்து மதஞான மின்றிக் கிடப்பதை சிந்திப்பான் ஒருவன் மனம் பற்றி எரியும் என்பது திண்ணம். இவ்வாறு மதஞானங் குன்றுவதற்குக் காரணங்கள் என்னை ? கல்வியில் முக்கியாம்சமாக மதக் கல்வி மதிக்கப்படாததும், மதத்தலைவர்கள் மதஞானம் பரப்ப முன்வராததும் ஆகிய காரணங்களே. மதஞானம் மக்களிடத்துப் பரவின் நாட்டில் ஒற்றுமையும் அமைதியும் குடிபுகும். மதஞானம் எங்கும் பரவும்படியாக மதத்தலைவர்களும் மற்றவர்களும் இன்னே முயற்சிப்பார்களாக. நம்மக்களிடத்து மதஞானமூட்டி அவர்கள் உய்யுமாறு செய்ய எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுவோமாக.

அஷ்டாவதானி

(ஒரு சிறுகதை)

(மயிலை ஸ்ரீமான் சீனி. வேங்கடசாமி எழுதியது)

299-ம் பக்கத்தொடர்ச்சி.

இவ்விதம் புண்ணிய க்ஷேத்திரங்களுக்கு யாத்திரை சென்று கடைசியாக நான் சோலைமலை என்னும் திருப்பதிக்குச் சென்றேன். ஸ்தல மகிமையுள்ள அவ்வூரில் நான் மூன்று நாள் தங்கினேன். அங்கு, கல்வி யறிவிற் சிறந்த ஞானியார் ஒருவரைச் சந்தித்தேன். அவர் அறிவும் ஒழுக்கமும் அன்பும் உடையவராயிருந்ததைக் கண்டு அவருடன் நான் நட்பானேன். மூன்று நாளான பிறகு நான் அவ்வூரைவிட்டு மதுரைக்குப் போக எண்ணங்கொண்டு, ஞானியாரையும் மதுரைக்கு வரும்படி கேட்டேன்.

" மதுரைக்கா போகிறீர் ?" என்று அவர் ஆச்சரியத்தோடு கேட்டார்.

" ஆம். மீனாட்சியம்மையையும் சொக்கநாதசுவாமியையும் தரிசிக்க வேண்டுமென்னும் அவா எனக்குண்டு. ஆகையால் தான் அங்கே போக எண்ணங் கொண்டேன். நீர் ஏன் ஆச்சரியப்படுகிறீர்?" என்று விடையும் வினவுமாகக் கேட்டேன்.

ஞானியார் சிரித்தார். பிறகு என்னைப் பார்த்து, "வேண்டாம், அவதானி ஐயரே ! வேண்டாம். நீர் மதுரைக்குப் போகவேண்டாம்" என்று சொன்னார்.

அவர் சொல்லியதைக் கேட்டு நான் ஆச்சரியமடைந்தேன். "என்ன நீர் சொல்லுவது எனக்கு விளங்கவில்லையே ! நான் மதுரைக்குப் போனால் எனக்கு ஆபத்து வருமென்றா நினைக்கிறீர்?" என்று அவரைப்பார்த்துக்கேட்டேன்.

" ஆம். கட்டாயம் ஆபத்துதான் வரும்" என்று சொல்லி சற்றுப் பொறுத்து, " என் ? நீர் மதுரை மதனாபிஷேகத்தைப் பற்றிக் கேள்விப் பட்டதில்லையோ ?" என்று வினவினார். "மதுரை மதனாபிஷேகமா? இல்லை.நான் கேள்விப்பட்டதில்லை. அவள் யார் ? அவளைப்பற்றி என்ன?

நான்மதுரைக்குப் போவதற்கும் அவளுக்கும் என்ன சம்பந்தம்?'' என்று ஒரே தடவையில் மூன்று நான்கு கேள்விகள் கேட்டேன்.

ஞானியார் ஆச்சரியத்தோடு என்னைப்பார்த்தவண்ணம் "அவளைப் பற்றி நீர் கேள்விப்பட்டதில்லையா ? மதனபிஷேகத்தை யறியாத—கேட்டுமறியாத, மனிதருமுண்டா ? இது ஆச்சரியந்தான். நல்லது இருக்கட்டும். நான் சொல்லுகிறேன். கேளும். நான் மதுரையில் வசித்தவனுகையால் எனக்கு அவளைப்பற்றி நன்ருகத்தெரியும். மதனபிஷேகம் மதுரைக்கோயிலின் தேவதாசி. அழகிற் சிறந்தவள். இருபத்துநாலு வயதுதான் இருக்கும். முற்றத்துறந்த முனிவர்களையும் தன் வலைக்குள் சிக்கும்படி செய்யும் சாமர்த்திய முடையவள். அவள் அழகிற் கட்டுண்டு பொன்னையும் பொருளையும் இழந்து நாசமான மனிதர்கள் அநேகர். அவளால் அழிந்த குடும்பங்களுக்குக் கணக்கில்லை. அவதானியாரே ! உம் கையில் அதிக பொருள் இருக்கிறது. நீரும் இளைய வயதுடையவராகக் காண்கிறீர். ஆகையால் நீர் மதுரைக்குப் போவதும் வருவதும் எப்படி ?'' என்று என்னைக் கேட்டார்.

"என்ன, நான் அவள் கையில் சிக்குண்டு என் பொருளை இழந்து கெட்டுப்போவேன் என்ரு அஞ்சுகிறீர்?'' என்று கேட்டேன்.

"ஐயரே, இப்படிச்சொன்னவர் அநேகரை நான் பார்த்திருக்கிறேன். கடைசியாக அவள் வலையில் சிக்காதவர் ஒருவருமில்லை. அவள் பிறப்பு வளர்ப்பையும் அவ்ளால் நாசமானவர்களைப்பற்றியும் நான் கண்டவரையில் சொல்லுகிறேன். அப்பொழுது அவளைப்பற்றி நீர் நன்ருகத்தெரிந்து கொள்வீர்'' என்று சொல்லி ஞானியார் மதனபிஷேகத்தின் சரித்திரத்தைச் சொல்லத்தொடங்கினர்.

"கேளும் ! அஷ்டாவதானியாரே. மதுரைக் கோயிலின் தேவதாசி மாணிக்கமாலை என்பவள். அவளுக்கு நெடுநாள் பிள்ளையில்லாமல் தவங்கிடந்து ஒரு பெண் குழந்தையைப்பெற்ருள்.

பொறுத்த கசம்

அஷ்டதிக்குஞ் சூழ்கோயிலாலவாய்ச் சொக்கருக்குத்
தட்டெடுக்குந் தழியிலாள்—வட்டமுலை

மாணிக்கமாலை யெனு மங்கையொரு பெண்டிதன்
காணிக்குத்தேடக் கருத்தாகி—ஊனைத்

தறைமெழுகி யுண்டு தவங்கிடந்து மெந்தக்
குறைகளெனக் குறிகள் கேட்டும்—பெறுவதற்குச்

செப்புத் தகடெழுதிச் செம்பொற் கழுத்திலிட்டும்
கெற்பத்துக் காமருந்து கிண்டியுண்டும்—தப்பாத்

திருவனந்தல் சேவித்துஞ் செண்பகப்பூவாசம்
மருவனந்த நந்தனங்கள் வைத்தும்—திரையுடலே

வேற்றொருவர் கண்டு விரும்பாத நாள், தாழை
காற்றடிக்கப் பூத்தகதைபோலச்—சாற்றும்

அரிவை தெரிவை கடந்தப்பானடக்கும்
பருவத்தே கர்ப்பம் படைத்தாள்—கூடவந்த

மாதமொரு பத்தாய் வயிறுளைந்து பெற்றாளவ்
வேதனையான் மூர்ச்சையாய் மெய் சோர்ந்தாள்—தாதிமார்

பெண்ணென்னார். காதிற்பிழிந்த மருந்ததுபோல்
துண்ணென்றெழுந்து துயர் தீர்ந்தாள்—வண்ணமணிப்

பொற்றொடிக்கை மங்கை நல்லாள் பொன்காய்க்கும்பூடொன்று
பெற்றதுபோலீன்றெடுத்த பெண்கொடியை—மற்றுளார்

ஏந்தி யிருகையாலெடுத்து நறுநீராட்டிப்
பூந்துகிலான் மெய்துவட்டிப் போற்றினார்............"

அதுமுதல் மாணிக்கமாலை, தான்பெற்ற குழந்தையை நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து வந்தாள்.

தேனே, கனியே. தெவிட்டாத தெள்ளமுதே,
மானே, யென்கண்ணே, மரகதமே—நானீன்ற

பொன்னே யென வெடுத்துப்பொற் குறங்கின் மீதேற்றி
மின்னேரிடையாள் விழிபாப்பி—நன்னுதலிற்

பாப்பிட்ட சொல்லி வெள்ளிப்பட்டமென வெண்ணீற்றுக்
காப்பிட்டாள் ; சிற்றடிக்குங் காப்பிட்டாள்—சேப்பிட்ட

செய்க்குவளைக்கண்மயிலே ! செம்பொனுள்ளபேர்களையுன்
கைக்குள்வளையென்று வளைக்கிட்டாள்—சிக்காப்புள்

ஒட்டுக்குளாவது போலுள்ள பணக்காரர்களுன்
பொட்டுக்குளாக வென்று பொட்டிட்டாள்—பொட்டனவே

வேந்தர்புதையல் வெளியாக்கு மஞ்சனம்போல்
வாய்ந்தவடிவேல் விழிக்கு மையிட்டாள்—காந்திமுக

வன்னக் கமலமதில் வண்டிருந்தாற் போல மகள்
கன்னத்தின் மீதோர் கறுப்பிட்டாள்—சொன்னதனம்

வீடேறப் பண்டை முதன்மேலேறத் தன்குடும்பம்
ஈடேறப் பொற்றொட்டி லேற்றினாள்—"தேடியுன்பால்

வாராதவராரார்? வந்துமடிச்சீலை கொட்டித்
தாராதவராரார்? தந்தனையிற்—சேராதார்.

ஆராரார்? சேர்ந்துனக்குள்ளாசை கொண்டு சுற்றுதார்,
ஆராராரென்று தாலாட்டினள்—தாலாட்டிச்

சீராட்டி முன்னிருத்திச் செங்கை கொட்டிக்காட்டிமஞ்ச
ணீராட்டியந்திநிலாக்கட்டிப்—பாரிற்

கிளைப்பெரிய நாகேந்த்ரன் கீர்த்தியைச் சொல்வாணர்
வளர்ப்பதுபோற் பெண்ணை வளர்த்தாள்.

இங்ஙனம் அருமை பெருமையாக அக்குழந்தையை மாணிக்கமாலை வளர்த்து வருநாளில் அக்குழந்தை ஐந்து வயதடைந்தது. அதைக்கண்ட தாசி, தன் குலத்தொழிலுக்கு வேண்டிய கல்வியைத் தன் மகளுக்குக்கற்பிக்க ஏற்பாடு செய்தாள். தாசிப்பெண்களுக்கு இன்றியமையாத ஆடல் பாடல்களும் கல்வியும் அக்குழந்தைக்குக் கற்பிக்கப்பட்டன. சில வருஷங்கள்வரையில் அச்சிறுபெண் தனக்குக் கற்பிக்கப்பட்ட வித்தைகளையெல்லாம் கற்று கைதேர்ந்தாள்.

இங்ஙனம் சில வருஷங்கள் கழிந்தன. பெண்ணும் பெரியவளாக வளர்ந்தாள். அவளழகும் நாடோறும்வளர்ந்துவந்தது. கடைசியாக அவள் தன்னை யறிந்தாள். அதாவது கலியாணம் செய்யும் வயதடைந்தாள்.

"இவள் பெயர்தானா மதனாபிஷேகம்?" என்றேன் நான்.

"ஆம்! அவதானி ஐயரே. அவள் பெயரைச்சொல்ல மறந்துவிட்டேன். இவள் பெயர்தான் மதனாபிஷேகம். இன்னும் இவள் செய்தியைக்கேளும்" என்று ஞானியார் மேலும் சொல்லத்தொடங்கினார்.

மாணிக்கமாலை, தன் மகள் மதனாபிஷேகம் வயதடைந்ததைக்கண்டு மனமகிழ்ந்தாள். ஏனென்றால் அந்தத்தாசி, தான் நெடுநாளாக எண்ணியிருந்த வியாபாரத்தைத் தொடங்கிப் பெரும் பொருள் சேர்க்கும் காலம் வந்துவிட்டது என்பதை நன்கறிந்தாள். ஒரு தாசிக்கிருக்கவேண்டிய எல்லா குணங்களும்—ஆடல் பாடல் பரத நாட்டியம் அழகு முதலியவைகளெல்லாம் தன் மகளிடம் பொருந்தியிருப்பதைக்கண்டு தாய் திருப்தியடைந்தாள். கடைசியாக, தான் தன் மகளுக்குக் கற்பிக்கவேண்டிய முக்கியமான கடைசி பாடத்தைக் கற்பிக்க எண்ணங்கொண்டாள். ஒரு நாள் அவள் மதனாபிஷேகத்தை யழைத்து, அவளுக்குத்தான் ஓதவேண்டிய மந்திரத்தை உபதேசித்தாள். அந்த மந்திரத்தின் சாரமான பொருள் என்னவென்றால், "பணம் சேகரிப்பதிலேயே உன் முழு கவனத்தையும் செலுத்தவேண்டும். பணத்தின்மேல் உனக்கு ஆசையிருக்கவேண்டுமே

யன்றி நீ யொருவர் மீதும் ஆசை வைக்கக்கூடாது. புண்ணியம், பாவம், நல்லது, கெட்டது, மானம், அவமானம் என்பதைப் பணம் சம்பாதிக்கும் விஷயத்தில் நீ கவனிக்கக் கூடாது'' என்பதேயாகும்.

மானே, யென் கண்ணே, மயிலே குயிலே, செந்
தேனே, மதனுபிஷேகமே!—மீனீன்ற

குஞ்சுக்கு நீச்சுங், கொடும்பாம்பின் குட்டிக்கு
நஞ்சுங் கொடுத்தவ ரார்! நங்கையே—செஞ்சிலைக்கைச்

சீவகனுக்கன்றொரு பெண் சிங்கமொரு கன்றீனும்
பாவனைபோலே யெழுதிப் பக்கத்தில்—ஓவியமாக்

காரானையொன்றெழுதிக்காட்ட வரிக்கன்று துள்ளிப்
போராடிபாய்ந்தகதை பொய்யலவே—யாருக்கும்

சாதித்தொழில் தனக்குத்தானே வருமொருவர்
போதிக்கவேண்டுமோ ? பொற்கொடியே'—மாதர்க்குள்

உன் புத்தி யென்புத்திக்கோ விரட்டியாகிலுமென்
றன் புத்தியுமகளே சற்றேகேள்—முத்துநகை

காட்டி வகைகாட்டி நடைகாட்டி யிடைகாட்டி நயம்
காட்டி யிளையோர்க்காசை காட்டுவாய்..............

.........முகந்திரைந்தாற் சல்லிக்காசொன்று முனக்
கீந்தாதரிப்பவரார் ? எந்திழையே!—ஆய்ந்தபஞ்சுப்

பெட்டிபோலே நரைத்த பெண்கள் கையிலென்ன வரும்
சட்டிசுறண்டவருந் தையலே—கட்டழகின்

வாலிபத்தே தேட்டின் மனம் வைத்தாற் பொற்றகட்டால்
வேலையிட்டுக் கட்டலாம் வீடெல்லாம்—காலைப்

பிடிப்பார் முழுப் பிரட்டுப் பேசி யிலைகீறி
மடிப்பார் தருவார் வருவார்..................

காட்டுவேனென் பாரக்கள்ள வண்டர் தங்களையுன்
வீட்டிலழையாதே மெல்லியலே—நீயொருத்தர்க்

காசை வைத்தாற் பின்னொருத்தரண்டா ருடனொத்த
வேசையர்க்கெல்லாம் நகைப்பாம் ; மெல்லியலே!—காசுபணம்

குப்பல்குப்பலாகக்குவித்தாலும் வாலிபத்தில்
வைப்பிருக்கச் சற்றுமனம் வையாதே—ஊரிலே

தந்தைகீழ்ப் பிள்ளையுண்டு தாய்கீழ்ச் சிறுவருண்டு
வந்தால் மறையவரச் சொல்லித்—

அஷ்டாவதானி

....

தோயுமிதங்காட்டிச் சுகங்காட்டு—பார்க்குள்ளே

பல்லுவிற்றுங்கீரைவிற்றும் பொன்கொடுப்பார் காணமக்குக்
கொல்லிமலைப்பாவாய் குல தெய்வம்—பல்விழுந்த

கூனற்கிழவன் கொடுக்கும் பணயமதில்
நானக்குழலே! நரையுண்டோ?—மானமின்றி

அப்பன் வருவான் அதன்பின் மகன் வருவான்
தப்புமுறையென்று நீ தள்ளாதே—வாள்விழியாய்!

வேடிக்கையாய் மாசி வீதியிலே நாமுலவ
ஆடிக்குமுன்னே யென்னாசையெனத்—தேடுநிதி

யுள்ளவரை மெள்ள உபாயமாய்க் கூட்டிப்போய்க்
கொள்ளும் பவளமுத்துக் கோவைவடம்—உள்ள

கடையும் சவளிக்கடையும் பார்த்து, ஐயா
கிடையாச்சரக்குக் கிடைத்த—தடைவா யென்

னுத்தண்டமாலையைக் காதோலையைப் பொன்மோதிரத்தை
வைதென்றாலும் கடுகவாங்கித்தா—பத்தஞ்சு

வட்டி சுமந்தாலு மப்பால் வாங்கலா மென்பாய் அச்
சொட்டனுக்கு நெஞ்சு சுறுக்கென்னும் —பொட்டெனத்தன்

கைத்தனத்தை யீவான் கடையிலே யுள்ளசாக்
கத்தனையும் வாங்கியறையிலிடு,—லச்சையற

மன்மதநூலைப் படித்த வம்பரையென்னாணை யுன்றன்
சென்மசென்ம முள்ள மட்டுஞ் சேராதே—சன்யாச

ருத்ராக்ஷப்பூணை ரூபர் சில ருண்டு வந்தால்
மெத்தையிலே வைத்து விளக்கணைத்துச்—சத்தமின்றிக்

கூடையிலே யாள் வந்து கூப்பிட்டாலையர்தமைக்
கூடையிலே மூடிவைத்துக்கூப்பிடு நீ.—அசையவுளம்

அஞ்சுகின்ற கச்சேரி யாட்சேவகர்வந்தால்
வஞ்சி யவரீந்ததை நீ வாங்கிக்கொள்—கொஞ்சமென

எண்ணாதே கைமுதல் மற்றென்னபோ மோர்செம்பு
தண்ணீர்போம் நாமிடும் பொய்ச்சத்தியம் போம்—பெண்ணணங்கே

வாவென்றழைப்பார் மணியப்பிலுக்கர் சும்மா
போவென்று சொன்னாலும்பொல்லாப்பு—பாவையே

சாதனையாச் சேலையிலே தம்பலத்தின் சாறுமிழ்ந்து
சூதகமானே னென்று தூரவிரு—மாதவிடா

யானநாளிற் பணயமஸ்தரொக்கங் காணிலொரு
பானைவெந்நீர்க்காக வெண்ணிப்பாராதே—நானுன்மேல்

மோகமுற்றேனீயென்மேல் மோகமில்லை யென்று சிலர்
தோகை நல்லாயுன் கருத்தைச் சோதிப்பார்—ஓகோநீர்

என்னமாச் சொல்ல வந்தீரென்னுசையும் மேலென்று
அன்னமே! யென்றலை தொட்டாணையிடு—சொன்னவந்த

பொய்யாணையாற் சீவன் போகுதோபாரெனக்குத்
தையாலவ்வாணை தயிர்ச்சாதம்—கையில்

இருட்டினிற் செல்லாப் பணத்தை யீந்து படுத்துக்
கருக்கலிலே போவாரைக் காட்டித்—தரச்சொல்லு

வாயமட்டாப் பேசினல், மானே! முசலின்மேல்
நாயை விட்டாற்போலெழுப்பி—நம்மைவிடு—கோயிலுக்குள்

நம்பியாரையருடனுனுண்டு; நம்பியார்
தம்பியாரைக் கூடிச் சஞ்சரி நீ—அம்பெனுங்கண்

மைவிஸ்தாரக் குயிலே! வாய்விஸ்தாரக் காரன்
கைவிஸ்தாரக்காரன் கையைவிடு—செய்யுமறைக்

கட்டளையார் வந்தாலுன் கைம்மருந்தாலே யறிவைத்
தட்டழியப் பண்ணித் தனம்பறிநீ—நல்ல

உடன்தையாகத்திரிந்த வுத்தியோகஸ்தர்க்கு
இடைஞ்சல் வந்தாலுன்னையும் வந்தேய்ப்பார்—மடந்தையே!

காணிக்கையானேனுன் கண்டியைத்தா தண்டையைத்தா
மாணிக்கமாலையைத்தா வைத்துநான்—காணிக்கை

தீர்ந்த மறுமாதந் திருப்பித்தருவனென்பார்
ஏந்திழையே! நீ சற்றிணங்காதே—காந்தாரி

தாய்க்கிழவி சம்மதித்தாற் சம்மதமென்பா யெனது
வாய்க்குப் பயந்தவர்பின் வாய்பேசார்—நோக்கமாய்

என்னைக் கலந்தவர்களென்றாலுங் கைநிறையப்
பொன்னைக் கொடுத்தாற் புணர்ந்துவிடு—மின்னே!

பறவை மிருகங்கண்முறை பார்க்குதோ வேசி
முறை பார்க்கவே பிழைப்பு மோசம்

என்று இவ்வாறு தாய்க்கிழவி தன் மகள் மதனபிஷேகதத்துக்கு தன்குல வித்தையை கற்பித்தாள். இவற்றை யெல்லாம் கேட்டறிந்த மதனபி ஷேகம் அன்று முதல் தன் வியாபாரத்தைத் தொடங்கி விட்டாள். அவளுக்குத் துணையாகத் தோழி பெண்களும் அமர்த்தப் பட்டனர். இப் பெண்கள் தாசித் தொழிலில் கைதேர்ந்து தமது சாமர்த்தியத்திற்கு ஏற்ற அடைமொழிகளுடன் பெயரிட்டு அழைக்கப் பட்டனர்.

தோழிமார் கைமருந்து சொக்கி யென்றுஞ் சாராயத்
தாழி யென்றுந் தூது சவுந்தி யென்றும்—எழுமதி

லேறியென்றுந் தஞ்சாவூரெத்தி யென்று மாமாயக்
காறி யென்றுங் குண்டுணிவாய்க் கள்ளியென்றும்—மாறூட்டச்

செல்வி யென்று மாமாயக் குருவியென்று மாரீசக்
கள்ளியென்றும் பத்துப்பேர் காமுகரை—மெள்ளப்

பொருத்துவாரூடலாய்ப் போவாரைமோடி
திருத்துவார் தாராரைச் சிம்பித்—துரத்துவார்

கல்லிலே நாருரித்துக் காண்பார் நனைந்தவிடங்
கல்லுவார் தாமுமொரு கைபார்ப்பார்.

இவ்விதம் மதனபிஷேகம் தன் தோழிகளின் உதவியாலும் தனது சாமர்த்தியத்தினாலும் செல்வமுள்ள பேர்களைத் தன் வலைக்குள் சிக்க வைத்து மெள்ள மெள்ள அவர்கள் கைப்பொருளை யுறிஞ்சியபின் அவர்களையும் கைவிட்டாள். அவள்கையில் சிக்காத வாலிபரிலர்.

..................இரு நிதியந்தேடு மந்த
மைவ்வார் விழியாள் மதிநுதற்கும்—செவ்விக்

கொடியிடைக்கு நிலவெறித்த குறுநகைக்கு மொயில் விளைத்த
பிடி நடைக்கும் வயிரமிட்ட ப்ரபை மிகுந்—தொடிகளுக்கும்

அலையுதித்த வமுதெனச் சொலருமொழிக்கு மிருவிழிக்கும்
மலைகளொக்கு முலைகளுக்கு மனதுவைத்து—வலையினுக்குள்

மான்சிக்கினாற்போல் மருள்வாருந் தூண்டிலிலே
மீன் சிக்கினாற்போல் மெலிவாரும்—என் சிக்கிக்

கொண்டோ மென்றுள்ளங் கொதிப்பாருங் கூடியின்பம்
கண்டோமென்று ளங்களிப்பாரும்—ஈங்கிவளுக்

கீயவகைகாணே மிரதம் பொன்னுக்குவது
பாயமென்று மித்ரம் பலகூட்டித்—தீயிற்

67

லக்ஷ்மி

குகையிலே வைத்துக் குனிந்தூதி வாதப்
புகையிலடி பட்டுப் புகைந்து—திகை தெரியா

மாலைக் கண்ணாகி மதிமயங்கித் தங்கள் தங்கள்
காலைக் கண்ணாக்கி வழி காண்பாரும்,—வாலிபத்தில்

பூணார் முலையாட்காப் பொன் திருடிக்கையிரண்டும்
சாணாகக் கண்டு தளர்வாரும்,—வாணுதற்காத்

தாங்கன்னமிட்டுத் தலையைக் கடைக் காசு
வாங்கென்ன விட்டுடலை மாய்ப்பாரும்—மானனையாள்

இட்டமருந்தா விருமல் பிடித் தோயாமற்
குட்டியிட்ட நாய்போற் குரைப்பாரும்—பொன்சரிகைச்

சேலை கொடுத்ததற்குச் சீமாட்டி யென் கொடுத்தாள் ?
சூலை கொடுத்தாளென்று சொல்வாரும்—ஐந்து பத்து

மாடு விற்றோம் நூறு மறிவிற்றோங் காணி விற்றோம்
உண்கலத்தை விற்றோ முடைமை விற்றோம்—பெண் செலவுக்

கென்னத்தைக் கேட்க வந்தா லென்னத்தை நாங் கொடுப்போம்
என்னத்தைச் சொல்லுவோ மென்பாரும்—முன்னமிந்த

மின்னாசை கொள்ளாமல் வீணாக்குக் கொண்டோமிச்
சன்னாசை மென்று தளர்வாரும்—என்ன செய்வோம்

பங்கை விற்று மீந்தோம் பணமினாந்தாபோ வென்றாள்
எங்கே சுமை யெடுட்போ மென்பாரும்—நாளிலே

பாண்டி நாட்டிச்சி பணமுறுஞ்சினாள் நாங்கள்
ஆண்டியானோ மென்றலைவாரும்—ஆண்டியர்தம்

தொண்டு போய் வேடம் போய்த் தோகைக்குடையவரைக்
கொண்டு போய்க் கையிற் கொடுப்பாரும்—கண்ட செட்டு

மோசமாச்சுகாண் முதலுக்குப் புல்வாண்டைக்
காசுமில்லை யென்று கரைவாரும்—வேசியிவட்

கீந்தபொருளை வட்டிக்கீந்தோமோ நாமிருக்க
வாய்த்தமச்சு வீடு கட்டிவைத்தோமோ—கூந்தலிளம்

பேடைமயில்போல் வீட்டுப் பெண்டாட்டிக்கே யுடைமை
சோடினையாப் பூட்டிச் சுகித்தோமோ—ஆடுகொண்டு

விட்டோமோ மாடு கொண்டு விட்டோமோ தெய்வத்துக்
கிட்டோமோ தேகியென்பார்க் கீந்தோமோ—அஷ்டதிக்கும்

நாடிப் புகழ் பெரிய நாகமன் போற் பாமாலை
சூடித் தியாகஞ் சொரிந்தோமோ—தேடுநிதி

தன்னைக் கொடுத்துத் தரித்திரத்தை வாங்கினோம்
என்னவியாபார மென்பாரும்—இன்னவகை

காமுக ரெல்லா மயங்கக் காளத்தியையன் மகன்
ஆமொருவனிவ்வூரனாதியையன்—சேம

மதுரைக் கொருநாள் போய் மாசித்தெருவில்
விதிவசத்தாற் கண்டானம் மின்னை—மதிநுதலாள்

மையலுக்குள் வீழ்ந்தான், வடுச் செய்த மாமரத்தில்
மெய்யுரிஞ்சப் போய்க் கவரிவீழ்ந்தாற்போற்—கையில்

இருந்த தெல்லாம் வீட்டிவிருந்த தெல்லாமாஸ்தி
இருந்த தெல்லாந் தோற்றானிரந்தான்—மருந்தினாற்

கள்ளுண்டார் போலக் கலக்கினான் ; வாசலிலே
தள்ளுண்டான் ; தன்னொழுக்கந் தப்பினான்—விள்ளுவதென்

ஆதியையன் என்னும் பேரன்றே போயிப்பால்வி
யாதியைய னென்னும் பேராயினான் ; பாதி

யுடலாகி யொட்டிய புண்ணுள்ளுருக்கயார்க்கும்
தொடலாகாச் சீச்சிரங்கு சூலை—கொடிய

அரையாப்பு மேக வெட்டை யண்டத்து வாதம்
புரைவாய் பவுத்ரம் புகைச்சல்—இருமல்

இளைப்புப் பொடுகு மருந்திட்ட நோய் பித்தம்
களைப்புமாய்ப் பூனைபோற் கத்திக்—கிழக்கே

அடுத்தமனையி லருகுதிண்ணை தன்னிற்
படுத்துக் கிடக்கிறான் பாரும்—படித்தவரே

இப்படியாத் தேடி யுண்ணுமேந்திழையாள் வாழ்மதுரைக்
கெப்படி போவீர் வருவ தெப்படி காண் ?"

என்றிவ்வாறு மதனாபிஷேகத்தின் செய்தியைத் தெரிவித்து, ஞானியார் என்னைப் பார்த்து, "ஐயரே! நீர் மதுரைக் கெப்படிப் போய்வருவீர் ?" என்று வினவினர்.

ஞானியாரைக் கண்டு நானும் விரக்தனானேன். அவரைப் பார்த்து "என்னநீர் சொல்லுவது. நான் வித்துவானல்லவா ? அஷ்டாவதானம் செய்தவனன்றோ ? சிற்றின்பத்தின் தீமைகளைப்பற்றி எத்தனையோ பிர

பந்தங்கள் பாடுவே னென்பதை நீர் அறியீர் போலும்! என்ன? இரும்புத்தூணை செல்லரிக்குமோ?'' என்று விடை பகர்ந்தேன்.

இதைக் கேட்டு ஞானியார் திருப்தி யடைந்தார். "இல்லை. எதற்கும் எச்சரிகை செய்து வைக்க வேண்டு மென்று சொன்னேன். மற்றப்படி ஒன்றுமில்லை. நீர் திடபுத்தியுள்ளவராயிருக்கிறபடியால், நீர் மதுரைக்குப் போவதை நான் தடுக்கமாட்டேன். நானும் உடன் வருகிறேன்'' என்றார் ஞானியார்.

"நல்லது அப்படியே புறப்படுவோம்'' என்று சொல்லி என்சம்மதத்தையும் தெரிவித்தேன். பின்பு சாப்பாடு முடித்துக் கொண்டு வழிப் பிரயாணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளையும் செய்துவிட்டு அன்று நானும் ஞானியாரும் மதுரைக்குப் புறப்பட்டுச் சென்றோம்.

(தொடரும்)

அமெரிக்காவில் மதுவிலக்குக்காக திரு ரயன் என்பவரையும் அவருக்கு உதவியாக வேலை செய்ய 2000 எஜண்டுகளையும் நியமித்திருப்பதாகத் தெரிகிறது.

சைமன் கமிஷன் செலவுக்கு எட்டு லட்சத்து 73 ஆயிரம் ரூபாய் இந்திய அரசாங்கத்தினின்றும் கொடுக்கவேண்டுமென்று இந்திய நிரந்தர வரவு செலவுக் கமிட்டியில் தீர்மானிக்கப்பட்டு விட்டதாம்.

ஒரு மைல் விஸ்தீரணத்திற்கு ஓசை பரப்பும் பெரிய கருவியொன்று சில தினங்கள் முன் நியூயார்க்கில் பரிசோதிக்கப்பட்டது. 10 லக்ஷம் ஜனங்கள் இதன் உதவியால் ஒரு விஷயத்தைத் தெளிவாகக் கேட்கக் கூடுமாம்.

போர்டு மோட்டார்கள் செய்யும் கம்பெனியார் போர்டு ஆகாய விமானம் தயாரித்திருக்கின்றனர். இது 20 அடி நீளமுள்ள இறக்கைகள் உள்ளதாயும், 48 காலன் பெட்ரோல் ஏககாலத்தில் வைத்துக்கொள்ளக் கூடியதாயும் இரண்டு விலிண்டர் மோட்டார் வைக்கப்பெற்றுள்ளதாகவு மிருக்கிறது.

நியூயார்க்கில் கன்னி மேயோ ஒரு பிரசங்கம் செய்தனராம்; விவாதத்திற்கு வருமாறு சிலர் கேட்டதற்கு அவர் மறுத்து விட்டாராம். உடனே அவர் முன்னிலையிலேயே அவர் எழுதிய 'இந்தியத்தாய்' என்ற புஸ்தகத்தை அவர்கள் கிழித்துக் கொளுத்திவிட்டதாக 'பார்வர்டு' பத்திரிகைக்குத் தந்திச் செய்தி யொன்று வந்திருக்கிறதாம்.

பத்திரிகாலயம்

(டாக்டர். ஸுதீந்திர போஸ் 'மாடர்ன் ரிவியூ'வில் எழுதுவதின் ஸாரமாவது)

அமெரிக்காவிலுள்ள மிசிகான் என்ற ஏரியின் மேல் கரையில் 'மில் வௌகீ' என்ற ஓர் பத்திரிகாலயமுளது. ஓர் நாள் மாலை ஆங்கு பல ஜனங்கள் திரள் திரளாக தங்கள் வியாபாரஸ்தாபனங்களிலிருந்து சென்று கொண்டிருக்கிறார்கள். எனினும், 'மில்வௌகீ' பத்திரிகாலயத்தி லுள்ள சந்தடியும் கூட்டமும் வேறோரிடத்திலுமில்லை. இக் கட்டடம் 60 லக்ஷம் ரூ. செலவழித்துக் கட்டப்பட்டிருக்கிறது. இது ஐந்து மேல் மாடிகளால் அழகுபெற அமைக்கப் பட்டிருக்கிறது. இதன் ஜன்னல்கள் மிகவும் அழகிய வேலைப்பாடுடையன.

வழிநடப்போர், தெருவி லிருந்துகொண்டே உள்ளே வேலைசெய்து கொண்டிருக்கும் பெரிய இயந்திரத்தை நன்றாகப் பார்க்கக் கூடுமாறு அது அமைக்கப் பட்டிருக்கிறது. அவ் இயந்திரம் ஒருமணி நேரத்தில் 42 பக்கங்கள் கொண்ட 1,35,000 பிரதிகளை அச்சிட்டு, வெட்டி, மடித் தும் விடுகின்றன. அவ்வறையில் நடைபெறும் எவ்விஷயத்தையும் தெருவிலிருந்து கொண்டே பார்க்கலாம். அமெரிக்காவிலுள்ள வேறெந் தப் பத்திரிகாலயமும் இவ்விதம் அமைக்கப் பெறவில்லை. வசீகரமான தோற்றமுடைய வாசற்படி வழியாக உள்ளே யுள்ள முக்கிய சாலைக்குச் சென்றதும், அச்சமயம் பத்திரிகை வெளிச்செல்லும் நேரமென உணர்ந்து கொண்டேன். 'ரிபோர்ட்டர்' களும் 'மெஸன்ஜர்' களும் உள்ளும் வெளியும் குழுமிக் கொண்டிருந்தனர். தாமதமாக வரும் விளம்பர தாரர் களும் அவரவர்களது அறிக்கைகளைக் கொணர்ந்தார்கள். பரபரப்பும் சந்தடியும் அதிகமாயிருந்தன. மின்சார சக்தியின் வழியாக நான் நான்கா வது மேன் மாடிக்குக் கொணரப்பட்டேன். பத்திரிகாசிரியர் சம்பந்த மான உத்தியோக சாலைகளும் சமாசாரங்களைச் சேகரிக்கும் அறையும் இங்குதானிருக்கின்றன. ஆசிரியர்கள், செய்தி யெடுப்போர்கள், 'காபி' வாசிப்போர் முதலியவர்கள் மிகவிரைவாக வேலையைச் செய்து கொண்டி ருந்தார்கள். வேலைமேல் வேலையும், அவசரத்தின்மேல் அவசரமும் அங்கு குடிகொண்டிருந்தன. அங்கு 'டெலிபோன்'கள் அடித்துக் கொண்டும், தந்திப் பொத்தான்கள் சப்தமிட்டுக் கொண்டும், 50 பேர்களடங்கிய ஓர் சேனை விரைவாக வேலை செய்து கொண்டுமிருந்தன. இக்காக்ஷி சுறு சுறுப்பாகவும், பார்ப்பதற்கு ரம்மியமாகவு மிருந்தது. இந்த சப்தத்தை

யும், அவர்களது வேலையையும் பார்த்து நான் பிரமித்துப் போனேன் சிறிது நேரத்திற்கப்பால் சமாசாரங்களுக்கு அரசாயும் காலங்களின் ஓர் அழியாத சக்தியாயுமுள்ள பத்திரிகைகள் வெளிவந்தன. அமெரிக்காவி லுள்ள எழு அல்லது எட்டு உயர்ந்த தினசரிப் பத்திரிகைகளுள் 'மில் வௌகீ' பத்திரிகை யொன்றாகும். அதில் பலமேன்மையான அம்சங்க. ளிருக்கின்றன. அந் நிலையத்திலிருக்கும் நவீன இயந்திரங்களையும், வேலை செய்யும் முறைகளில் அவர்கள் கொண்டிருக்கும் முன்னேற்றங் களையும், உபாயங்களையும் சமாசாரங்கள் சேகரிக்கும் காரிய நிலையங்களை யும் பற்றிக்கூட நான் அதிகம் கூறவில்லை. ஆனால் ஓர் முக்கிய அம் சம் யாதெனில் ௸ பத்திரிகையின் பொதுஜன ஊழியமே. இந்த அம்சத்தில் அமெரிக்காவிலுள்ள வேறெந்தப் பத்திரிகாலயங்களும் இதற்கீடல்ல வெனக் கூறுவது பொருந்தும்.

சில ஆண்டுகட்கு முன்னர் நான் இங்கிலாந்திலிருந்த போழ்து 'லண்டன் டைம்ஸ்' நிலையத்திற்குச் சென்றிருந்தேன். அதன் ஆசிரியர்களி லொருவரை நான் காணவேண்டியிருந்தது. அப்போது நான் அமெரிக்காவிலுள்ள ஓர் பிரபல தினசரியில் அமர்ந்திருந்தேன். ஒருவர் எனக்கு டைம்ஸ் கட்டடத்தைக் கூட்டிக்கொண்டு காட்டி, ஆசிரியர்களைப் பார்ப்பது கடினமென்றும் தெரிவித்தார். ஏனெனில் அவர்கள் ஆங்கிலர்களாதலால், தாங்கள் பார்க்க வருவோரைக் காட்டி லும் உயர்ந்தவர்களென நினைத்துக் கொண்டு விடுகிறார்கள். இம் முறையிலுள்ள அமெரிக்கர்களுக்கும் ஆங்கிலர்களுக்கும் எத்துணையோ வித்தியாச முளது!

'மில்வௌகீ' பத்திரிகையைப் பற்றி அறிமுகம் செய்து கொள்ள வேண்டி, நான் ஓர் சமயம் ௸ பத்திரிகையின் 'வைஸ்—பிரஸி டெண்டான' மிஸ்டர் எச். ஜே. கிராண்ட் என்பவரைப் பார்க்கச் சென் றேன். அவர் ஓர் சாமர்த்தியம் பொருந்திய பத்திரிகைத் தொழிலா ளர். அவ் வமயம் அவர் அவசரமாக வேலை செய்து கொண்டிருந்தார். ஆனால், அவரைப் போன்ற அன்பான மனிதரை நான் பார்த்ததே யில்லை. அவர் அவரது பத்திரிகையைப் பற்றியும் அப்பத்திரிகையின் 45 ஆண்டு வளர்ச்சியைக் குறித்தும் அவர் என்னுடன் சம்பாஷித்துக் கொண்டிருந்தார். அதில் ஓர் ருசிகரமான விஷயம் பின்வருமாறு. அவர் கூறியதாவது :—

"1918-ம் ஆண்டுற்ற யுத்த சமாதானத்திற்குப் பின்னர், வில் கான்ஸிலுள்ள பிரதி நிதித்துவம் வாய்ந்த சில போதகாசிரியர்கள்

ஐரோப்பியயுத்த களங்களுக்கு விஜயம் செய்து, யுத்தத்தினுல் எழும் நிலைமைகளைக் கவனித்து, அவைகளைப் பற்றிப் பொது ஜனங்களுக் கறிவித்தால், விஸ்காவின் சமஸ்தானத்திலுள்ள கல்விமுறையானது மிகவும் முன்னேற்ற மடையுமென இப்பத்திரிகை தீர்மானித்தது".

"நீங்கள் எவ்விதம் போதகாசிரியர்களைப் பொறுக்கி யெடுப்பது" என அவர் கேட்கப்பட்டார்.

"பொது ஜனங்களின் வாக்குரிமையிலிருந்து போதகாசிரியர்கள் பொறுக்கி யெடுக்கப்பட்டார்கள். பத்திரிகை பிரக்யாதியடைய வேண்டுமென இவ்விதம் செய்யவில்லை. 15 லக்ஷம் வாக்குரிமைகள் கொடுக்கப் பட்டன. 11 போதகாசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுடன் பத்திரிகைப் பிரதிநிதி யொருவரும் அனுப்பப்பட்டார். இவர்களது பிரயாணச் செலவை பத்திரிகையே வகித்துக்கொண்டது".

'பிரயாணம் எவ்வளவுகாலம் பிடித்தது ?'

"1920-ம் ஆண்டு ஜூலைமீ ஆரம்பத்தில் இக் கோஷ்டியானது இங்கிலாந்திற்குப் பிரயாணமாகி, பிரான்ஸ், பெல்ஜியம், ஸ்காத்லாந்து, ஸ்விட்ஸர்லாந்து முதலிய விடங்களுக்குச் சென்று ஆகஸ்டுமீ மத்தியில் திரும்பிவந்தது. விசேஷ ஆராய்ச்சிக்குற்ற சமயங்களும், உத்தியோக முறையில் அவர்கள் கவனிக்கப்பெற்று மரியாதைகளும் அவர்களுக்கு அளிக்கப் பெற்றன".

"இவையெல்லாம் ருசிகரமாயிருக்கின்றன. ஆனல் எவ்வழியில் இவ் யாத்திரீகர்கள் அமெரிக்காவிற்குப் பிரயோஜனமாகிறார்கள்.

பத்திரிகையால் இவர்களுக்கு போட்டோ படங்கள் அளிக்கப்படுகின்றன. பிரயாண சமயத்தில் இவர்கள் எடுத்த மிக ருசிகரமான படங்களிலிருந்து பார்த்துத் தெரிந்துகொண்டவைகளை பல தடவைகளில் பிரசங்க மூலமாகவும் தெரிவித்துள்ளார்கள். இத்தகைய முயற்சியில் முதன் முதலாக இப்பத்திரிகைதான் இறங்கியது."

மிஸ்டர் கிராண்ட் மிகவும் உற்சாகமாக சம்பாஷிக்குந் தன்மையை யுடையவர். ஆனல் அவர் உண்மையையே பேசினர். அவர் என்னை அவருடன் அழைத்துச் சென்று கட்டடம் முழுவதையும் காட்டினர். அக்கட்டடமானது ஓர் உண்மையான தேன் கூட்டிற் கொப்பாகவிருந்தது. பொதுஜன உபகாரத்திற் குற்றபல ஸௌகரியங்கள் ஆங்கிருந்தன. 'பிரஸ்' இருக்கும் அறையைத் தவிர கீழேயுள்ள மற்ற விடங்களெல்லாம் பொதுஜன ஸௌகரியார்த்தமாகவே யிருந்தன. அங்கு ஓர்

'லாபி'யும் 'ஜர்னல் ரேர்கிளப்'பும், புருஷர் ஸ்திரீகளுக்கு களைப்பாறும் அறைகளும், சமாசாரம் கேட்பதற்கும் ஓரிடமும், பொது ஜனங்கள் ஸௌகரியத்தை யொட்டி ஓர்கிளைப் புத்தகசாலையும், ஓர் தந்தி ஆபீசும், 'டெலிபோன்' இடங்களும், ஓர் கிளை தபால் ஆபீசு மிருந்தன. 'ரேர் கிளப்' எதற்காக வென நான் ஆச்சரியப்பட்டுக்கொண் டிருந்தேன். அந்த கிளப், பிரயாணம் செல்ல விரும்புவோர்கள் அங்கு சென்று ஷை பத்திரிகாசிரியர்களுடன் கலந்து கொண்டு செல்வதற்கே அமைக்கப் பெற்றிருக்கின்றதெனப் பின்னர் தெரிந்து கொண்டேன்.

அக் கூட்டத்தின் இரண்டாவது மாடியில் பொழுது போக்கு மிடமொன்றில் நான் நுழைந்தேன். இங்கு மிகவும் விலையுயர்ந்த மேஜைகள், அழகிய கம்பளங்கள் முதலியன போடப்பட்டு வந்தவர் களுக்குபசரணை செய்யுந் தன்மையதாயிருந்தது. இந்த அறையிலுள்ள ஸௌகரியங்கள் விஜயம் செய்வோர்களால் மாத்திரம் அனுபவிக்கப் படு கிறதில்லை. பத்திரிகையில் சம்பந்த முள்ளவர்களும் அங்கு செல்லுவார் கள். பத்திரிகை உத்தியோகஸ்தர்கள் களைப்பாறுவதற்கெனப் பிரத்தி யேகமான அறைகளுமிருக்கின்றன. வேறு பிரதேசங்களிலிருந்து அங்கு செல்பவர்களுக்கு கடிதங்கள் வரையவோ, நண்பர்களைச் சந்திக் கவோ அந்த இடம் மிகஸௌகரியமா யிருக்கின்றது.

அங்கு ஓர் பொருட்காக்ஷிசாலையு மிருக்கிறது. மூன்று மாதங் களுக்கோர்முறை இது மாற்றப்படும். பொது ஜனங்கள் பொழுது போக்கிற்காக அமைக்கப்பட்டிருக்கும் அறைக்குப் பக்கத்தில் இரு பிரசங்க அறைகளிக்கின்றன. இவ்வறைகளெல்லாம் பொதுஜன ஸௌகரியத்திற்கென்றே விடப்பட்டிருக்கின்றன. இங்கு கம்பியில் லாத் தந்தி வசதியு மிருக்கின்றது.

இங்கு வேலை செய்பவர்களுடைய வசதிகளும் நன்கு பரிபாலிக்கப் படுகின்றன. நான்காவது மாடியில் சிறந்த ஆஸ்பத்திரி வசதியுமிருக் கிறது. அங்கு, அங்குள்ள தொழிலாளர்களுக் கெல்லாம் இனாமாக வைத்தியம் செய்யப்படுகிறது. அங்கு ஓர் சுத்தமான உண்டிசாலையு மிருக்கிறது.

ஷை பத்திரிகைக்கு ஓர் வருஷ வருமானம் $1\frac{1}{2}$ கோடி நூக்கு மேலாகிறது. மூன்றில் ஒன்று விளம்பரங்களிலிருந்து கிடைக்கிறது. இது ஓர் உயர்ந்த பத்திரிகை யென்பதில் எவ்விதத்திலும் சந்தேக மில்லை.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
210376.
சென்னை 600 008

நட்டாஜி

அல்லது

சிவாஜியின் சேனைத்தலைவன்

(ஸ்ரீமான் மயிலை சீனி. வேங்கடசாமி எழுதியது)

9-வது அத்தியாயம்.

முதற்போரில் மகாராட்டிரர்கள், முகம்மதிய சேனையை முறியடித்து ஓட்டிவிட்டபோதிலும், அவர்கள் முகம்மதியரை முழுவதும் வென்றுவிட்டதாகச் சொல்ல முடியாது. தற்போதுள்ள நிலைமையில், முகம்மதிய வீரர்களை மகாராட்டிரர் வெற்றிகொள்ளக்கூடும் என்று நினைக்கவும் இடமில்லை. ஏனென்றால் பெருந்தொகையுள்ள பீஜப்பூர் சேனைகளை எதிர்த்துப் போராடப் போதுமான சிப்பாய்கள் தற்போது கைவசமில்லை. ஆகவே, கோட்டைத்தலைவராகிய திரியம்பக ராவ் நட்டாஜியுடனும் மற்றுமுள்ள முக்கியமான உத்தியோகஸ்தருடனும் கலந்து, மேல் செய்ய வேண்டிய காரியங்களைப்பற்றி யோசித்தார். பல விஷயங்களைப்பற்றியும் நுணுக்கமாக நெடுநேரம் ஆழ்ந்து யோசித்த பிறகு கடைசியாக ஒரு முடிவுக்கு வந்தார்கள். அதாவது, தேசீயத் தலைவராகிய சிவாஜி சேனைகளை உதவிக்காக அனுப்பி வைக்கும் வரையில் யுத்தத்தை நிறுத்திவைப்பதென்றும், உள்கோட்டைகளில் ஒன்றாகிய திருவளர் குன்றத்தில் (ஸ்ரீவர்த்தனம்) எல்லோரும் போய்விடுவதென்றும், இத்திருவளர் குன்றத்துக் கோட்டை உயரமான பாரைமேல் பலமாகக் கட்டப்பட்டிருப்பதால், அதனை முகம்மதியர் இலேசில் பிடித்துக் கொள்ள முடியாதாகையால், முகம்மதியருக்கு அதிக சிரமமும் வேலையும் அதிகமாக ஏற்படுமேயல்லாமல் தங்களுக்கு (மகாராட்டிரர்களுக்கு) எவ்வித கஷ்டமும் நேரிடாதென்றும், இதற்குள்ளாக உதவிக்குச் சேனை வந்துவிடுமாதலால் பிறகு முகம்மதிய சேனையைச் சுலபமாக ஓட்டிவிடலாமென்றும், தங்களில் யாரேனும் ஒருவர் உடனே சிவாஜியினிடம் தூது சென்று அவருக்குக் கோட்டை முற்றுகை யிடப்பட்டிருக்கும் விஷயத்தைத் தெரிவித்து சேனையை உடனே அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ள வேண்டுமென்றும் அவர்கள் தீர்மானித்தார்கள்.

உடனே, கோட்டையிலுள்ள எல்லோரும் திருவளர் குன்றத்தில் தங்கள் தங்கள் சாமான்களுடன் போய்விட வேண்டும் என்று உத்தரவு

செய்யப்பட்டது. சற்று நேரத்திற்கெல்லாம், சிப்பாய்கள் மூட்டை முடிச்சுகளுடன் போவதும் வருவதுமாக சந்தடி ஏற்பட்டது. ஆனால், அரை மணிநேரத்திற்குள் எல்லாம் அடங்கிவிட்டது. வெளிக் கோட்டையில் ஒருவரையும் காண முடியவில்லை. எல்லோரும் ஸ்ரீவர்த்தனம் என்னும் உள்கோட்டையில் போய்விட்டார்கள்.

ஆனால், கோட்டை முற்றுகையிடப்பட்டிருக்கும் செய்தியை சிவாஜிக்குத் தெரிவிக்க வேண்டுமன்றோ ? சிவாஜியிடம் தூது செல்லக் கூடியவர் யார்? இந்தக் கேள்வி உண்டானபோது, நட்டாஜி "தூது போக நான் தயாராயிருக்கிறேன்" என்று முன் வந்தான். திரியம்பக ராவும் இதற்கு இணங்கினர். உண்மையிலேயே, நட்டாஜி கோட்டையிலிருப்பது திரியம்பகராவுக்குப் பிடிக்கவில்லை. ஏனென்றால், நீக்ரோவ வீரனைக் கொன்று மகாராட்டிர வீரர்களை உற்சாகப்படுத்தி முகம்மதிய சேனையைத் துரத்தியடித்த நட்டாஜியை, சிப்பாய்களெல்லோரும் புகழ்ந்து கொண்டாடி அவனை ஒரு தலைவனைப் போல் பாவிக்கத் தொடங்கி விட்டார்கள். இவ்விதம் நட்டாஜி, சிப்பாய்களால் கொண்டாடப்படுவது திரியம்பகராவுக்குப் பிடிக்கவில்லை. ஆகையால் நட்டாஜி சிவாஜியிடம் தூது போவதாக முன் வந்தபோது அவர் அதை மகிழ்ச்சியோடு ஒப்புக் கொண்டார். எனவே, நட்டாஜி அன்றிரவு புறப்பட்டுச் செல்வதென்று தீர்மானித்தான். முகம்மதியர் கோட்டைக்கு வெளியில் தங்கியிருக்கிறபடியால், அவர் கண்களில் படாமல் கோட்டையைக் கடந்து அப்பால் செல்வது சுலபமான காரியமல்ல. முகம்மதியர் கையில் சிக்கிக் கொண்டால் இவனை "உளவறியும் ஒற்றன்" சந்தேகித்துக் கட்டாயம் கொன்று விடுவார்கள். ஓ! அப்பொழுது கோட்டையின் கதி என்னாகும்? சிவாஜிக்குச் செய்தி தெரிவிப்பவர் யார்? சிவாஜி கோட்டையின் நிலைமையை யறியவில்லை ஆனால், அவர் சேனையை உதவிக்கனுப்புவதெப்படி? உதவிக்குச் சேனை அனுப்பப்படவில்லையானல் கோட்டை முகம்மதியர் கையில் வீழ்ந்து விடுவது நிச்சயம். எனவே, இத்தூது மிக முக்கியமானதும் ஆபத்துள்ளதுமாயிருப்பதை நட்டாஜி நன்கறிந்தான். கோட்டையின் வெற்றியும் தோல்வியும் தன் கையில் இருப்பதை அவன் உணர்ந்தான். இவற்றையெல்லாம் நட்டாஜி தனியே தன் அறையில் உட்கார்ந்து யோசித்துக் கொண்டிருந்த போது, திடீரென்று அவன் மனதில் ஏதோ யோசனை தோன்றியதுபோல் அவன் கண்கள் மலர்ந்தன. பிறகு "ஆம்! அப்படித்தான் செய்ய வேண்டும். அதுதான் சரி" என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டான். பிறகு சட்டென்று

எழுந்து தன் அறையைவிட்டு வெளியே வந்தான். இப்பொழுது மாலை வேளை. சூரியன் மறைந்து விட்டான்; ஆனால், இன்னும் வெளிச்சம் இருக்கிறது. நட்டாஜி கோட்டையின் இரண்டொரு தெருக்களைக் கடந்து சென்று ஒரு கட்டிடத்தண்டை வந்ததும் நின்றான். அந்தக் கட்டிடம் இரும்புக்கிராதிகளாலும் பலமான சுவர்களாலும் அமைக்கப்பட்டிருந்தது. சில சிப்பாய்கள் துப்பாக்கியும் கத்தியுமாக நின்று இக் கட்டிடத்தைக் காவல் புரிந்தனர். நட்டாஜி அக்கட்டிடத்தின் தாழ்வாரத்தில் சென்ற போது சிப்பாய்கள் அவனுக்கு மரியாதையாக, ஆனால் சிப்பாய்களின் வழக்கமான மிடுக்குடன் வந்தனம் செய்தனர். நட்டாஜி அவர்களுக்குப்பதில் வந்தனம் செய்து அங்கிருந்த ஒரு வீரனைப் பார்த்து ஏதோ சொன்னான். உடனே அவ்வீரன் பதில் ஒன்றும் பேசாமல் தன் சட்டைப் பையிலிருந்து ஒரு சாவியை யெடுத்துக் கதவின் பூட்டைத் திறந்து கதவைத் தள்ளினான். உடனே கதவு திறந்தது. நட்டாஜி உள்ளே சென்றதும் அவ்வீரன் மறுபடியும் கதவை மூடிக் கொண்டான். நட்டாஜி சென்ற அறை அயூப்கான் சிறைவைக்கப் பட்டிருக்கும் அறையாகும். ஆகையினால்தான் அவ்வறை பூட்டப்பட்டு காவல் வைக்கப்பட்டிருக்கிறது.

நட்டாஜியைக் கண்டவுடனே அயூப்கானுக்கு மிகுந்த கோபமுண்டாய்விட்டது. அவன் நட்டாஜியைப் பார்த்து "நான் சாதாரண சிப்பாயைப் போல் அலட்சியமாக நடத்தப்படுகிறேன். எனக்குச் சாதாரண சாப்பாடுதான் கொடுக்கப்படுகிறது. என்னை யார் என்று நினைத்து விட்டீர்கள்? பீஜப்பூர் அரசராகிய மாட்சிமை தங்கிய முகம்மது அடில் ஷாவின் மைத்துனனாகும் நான். அப்படியிருந்தும் அரசகுடும்பத்துக்குரிய மரியாதையோடும் அந்தஸ்துடனும் நான் நடத்தப்படவில்லை. என்னை கேவலம் ஒரு சிப்பாயைப்போல் நடத்துகிறீர்கள்" என்று கோபமும் வெறுப்புமாகக் கேட்டான்.

இதைக் கேட்டதும் நட்டாஜி ஆச்சரியமும் மகிழ்ச்சியும் அடைந்தான். ஏனென்றால், அயூப்கான் அரச குடும்பத்தைச் சேர்ந்தவனென்றாவது மாட்சிமை தங்கிய முகம்மது அடில்ஷாவின் மைத்துனன் என்றாவது இதற்குமுன் நட்டாஜிக்குத் தெரியாது. அயூப்கான் அறிவும் முன் யோசனையுமுள்ளவனாயிருந்தால் இந்த உண்மையைத்தன் பகைவனாகிய நட்டாஜிக்குச் சொல்லிபிருக்கமாட்டான். அவன் முட்டாள் தனமாகத் தான் இன்னானென்பதை வெளியிட்டவுடனே நட்டாஜிக்கு மிகுந்த மகிழ்ச்சியுண்டாய்விட்டது. ஏனென்றால், மாட்சிதங்கிய பீஜப்பூர்

அரசன் தன்மைத்துனனைச் சிறை மீட்கும் பொருட்டுப் பெருந்தொகை யான பணத்தைக் கொடுக்கப் பின்வாங்கமாட்டான். இந்த பணததைக் கொண்டு தேசீய கட்சியை எவ்வளவோ பலப்படுத்தக்கூடும். ஆகவே அயூப்கான் விலைமதிக்கத் தகுந்த கைதி யென்பதை நட்டாஜி அறிந்தான். ஆனால் தனக்குண்டான ஆச்சரியத்தையும் மகிழ்ச்சியையும் உள்ளடக்கிக் கொண்டு,

“உங்கள் தகுதிக் கேற்ப நீங்கள் நடத்தப்படவில்லை யென்று சொல்லுகிறீர்? அப்படியானால் உமக்காக நான் விசனப்படுகிறேன். கோட்டைத் தலைவர் திரியம்பகராவிடம் பேசி தக்க ஏற்பாடுகளைச் செய்யும்படிச் சொல்லுகிறேன். ஆனால், முற்றுகையிடப்பட்டிருக்கும் ஒருகோட்டையில் அதிகமான சௌகரியங்களை நீர் எதிர்பார்ப்பது கூடாது” என்று நட்டாஜி விடையளித்தான்.

“ஓ! இன்று காலையில் பீரங்கி வெடிகள் கேட்டபோதே சந்தேகப்பட்டேன். சேனைத்தலைவனாகிய நான் இல்லாதபோதிலும், உதவித்தலைவனாகிய அவிஸ்கான் சேனைகளைக் கூட்டிக்கொண்டு வந்து மகாராட்டிர எலிகளாகிய உங்களைக் கோட்டையிலிருந்து துரத்தியடிப்பானென்று எனக்குத் தெரியும்” என்று திருப்தியாகவும் அலட்சியமாகவும் பேசினான் அயூப்கான்.

இவன் பேசியதைக் கேட்டு நட்டாஜிக்குக் கோபம் வந்த போதிலும் உடனே உள்ளடக்கிக் கொண்டான். அமைதியாகவே பேசி, தற்பெருமையுள்ள அயூப்கானிடமிருந்து அறியக்கூடிய இரகசியங்களைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்பது அவன் கருத்து. ஆகவே அவன், “அந்த அவிஸ்கான் இந்த பலமான கோட்டையைப் பிடித்துவிடுவானென்று நினைக்கிறாய்? அப்படிக் கொன்றும் அதிகமான சேனைகளும் பீரங்கிகளும் அவனிடம் இருப்பதாக நான் நினைக்கவில்லை” என்று அலட்சியமாக விடையளித்தான்.

“அவ்வளவு அலட்சியமாகவா நினைத்து விட்டாய்? பீஜப்பூர் சமஸ்தானத்தில் செய்யப்பட்ட திடமான ஆறு பீரங்கிகளும் கைதேர்ந்த பீரங்கிவீரர்களும் ஏராளமான சிப்பாய்களும் அவனிடம் இருக்கிறார்கள். சிப்பாய்களை முன்னின்று நடத்துவதற்கு கைச்சண்டையில் கைதேர்ந்த “சித்திஹுசேன்” என்னும் நீக்ரோவன் இருக்கிறான். இந்த நீக்ரோவன் பீஜப்பூர் பட்டாளத்தில், எனக்கு இரண்டாவதாக கத்திச் சண்டையிலும் தேகபலத்திலும் வீரத்திலும் பேர்போனவன். அவனையும் அவிஸ்

கானையும் தலைவனாகக்கொண்ட பீஜப்பூர் சேனை நாளைக்கே கோட்டையைப் பிடித்து விடுவார்கள் என்பதில் சந்தேகமில்லை. நான் மாத்திரம் அங்கு இருந்திருந்தால் இன்றைக்கே கோட்டையைப் பிடித்து விட்டிருப்பேன்'' என்று பெருமையாகவும் உறுதியாகவும் பேசினான்.

நட்டாஜி, "இவ்வளவுதானே! நான் என்னமோ பிரமாதமாக நினைத்தேன். இப்பொழுது, எங்களிடமுள்ள பீரங்கிகளும் சிப்பாய்களும் அவிஸ்கானை துரத்தியடிக்கப் போதுமானவை'' என்று சொல்லி பிறகு திடீரென்று யோசனை தோன்றியது போல "நல்லது இருக்கட்டும். கடவுள் அருளால் நாங்கள் அவிஸ்கானை துரத்தியடித்து விடுகிறோம் என்று வைத்துக் கொள்வோம். பீஜப்பூர் அரசர் வேறே சேனையை அனுப்பிவைப்பாரா? அல்லது வேறே அரசர்கள் தங்கள் சேனையை உங்களுக்கு உதவிக்கனுப்புவார்களா? நான்..........'' என்று சொல்வதற்குள் மூடனான அயூப்கான்,

"அவிஸ்கானுக்கு வேறே சேனைகள் வேண்டியதில்லை. இப்பொழுது அவனிடமுள்ள சேனையே போதுமானது. அந்த பெருஞ்சேனையைக் கொண்டு, அந்தத்திருட்டுப் பயல் சிவாஜியிடமுள்ள எல்லாக் கோட்டைகளையும் ஒவ்வொன்றாகப் பிடித்து விடுவான். அதன் பிறகு அடுத்த மாதத்தில், கலகக்காரப் பயல்களை யெல்லாம் தகுந்தபடி தண்டிக்கும் பொருட்டு இதைப் போன்ற ஒரு பெருஞ்சேனை பீஜப்பூரிலிருந்து அனுப்பப்படும்'' என்று சொன்னான்.

பிறகு நட்டாஜி, முகம்மதிய சிப்பாய்கள் தங்களை யொருவருக்கொருவர் அறிந்து கொள்ளும்படி மறைபொருளாகப் பேசும் வார்த்தைகளாகிய "குழூக்குறிகளை'' அறிந்து கொள்ளத் தந்திரமாக அயூப்கானுடன் பேசினான். அயூப்கான் எவ்வளவு தான் தற்பெருமையும் மூடனுமாயிருந்த போதிலும், தன்பகைவர்களுக்கு மிகுந்த உதவியாயிருக்கக் கூடிய, "குழூக்குறிச் சொற்களை'' நட்டாஜிக்குத் தெரிவிக்க அவ்வளவு மூடனல்லன். ஆகவே, நட்டாஜி தந்திரமாகக் கேட்ட கேள்விகளுக்கு அயூப்கானும் தந்திரமாகவே விடையளித்தான். அயூப்கான் சாக்கிரதையாயிருக்கிறான் என்றறிந்ததும், நட்டாஜி தான் முக்கியமாகக் கருதிவந்த குழூக்குறி சொற்களை அறிய முடியாதென்று தெரிந்து, "நல்லது நான் போய்வருகிறேன். உன் சௌகரியத்தை யறிந்து போகலாம் என்று எண்ணித்தான் இங்கு வந்தேன். உன் தகுதிக்கேற்ப எவ்வளவு சௌகரியங்களைச் செய்ய முடியுமோ அவ்வளவையும் செய்து கொடுக்கும்படி திரியம்பகராவுக்குத் தெரிவிக்கிறேன்'' என்று சொல்லி கதவைத்

திறந்து வெளியே வந்தான். உடனே காவல் புரிந்த சிப்பாய் கதவை மூடி பூட்டிவிட்டான். நட்டாஜி அங்கிருந்து புறப்பட்டுத் திரியம்பக ராவின் மாளிகைக்குச் சென்றான்.

திரியம்பகராவ் அவனை வரவேற்று அருகில் அமரச் செய்து அவன் வந்த காரியத்தைப் பற்றி விசாரித்தார். அயூப்கான் அரசகுடும்பத்தைச் சேர்ந்தவன் என்று நட்டாஜி அவருக்குத் தெரிவித்தபோது அவரும் அதிக ஆச்சரியப்பட்டார். பிறகு நட்டாஜி, அயூப்கானுக்குத் தகுந்த சௌகரியங்களை ஏற்பாடு செய்யும்படி அவரைக் கேட்டுக் கொண்டான் திரியம்பகராவ் அதற்குச் சம்மதித்தார். பிறகு, அவர் நட்டாஜியைப் பார்த்து "நல்லது. நீர் எப்பொழுது புறப்பட்டுப் போக நினைத்திருக்கி றீர்!" என்று கேட்டார்.

"இன்னும் இருளாகவில்லையே. இன்று இரவு நிலா வெளிச்சம். இருக்காது. முழுவதும் இருட்டிவிட்டவுடன் என் பிரயாணத்தைத் தொடங்க எண்ணி யிருக்கிறேன்" என்று விடைகொடுத்தான் நட்டாஜி. திரியம்பகராவ் நட்டாஜி கைகளைப் பிடித்துக் கொண்டு அவன் முகத் தைப் பார்த்து "நட்டாஜி! காலதாமதமின்றி எவ்வளவு விரைவாகப் போகக் கூடுமோ அவ்வளவு சீக்கிரமாகச் சென்று நீ நமது தலைவர் சிவாஜி யைக் கண்டு பேச வேண்டும். கூடிய சீக்கிரத்தில் சேனைகளை உத விக்கு அழைத்துக் கொண்டுவா. இன்று உணவுப் பொருள்களை யெல் லாம் கணக் கெடுக்கும்படிச் சொன்னேன். கணக்கெடுத்துப் பார்த்த தில் இன்னும் 6 வாரங்களுக்குத்தான் உணவுப் பொருள்கள் கைவச. மிருக்கிற தென்று தெரியவந்தது. பகைவர்கள் கோட்டைக்கு வெளியில் இருப்பதால் புதிதாக உணவுப் பொருள்களை வாங்கிக் கொண்டுவர முடியாது. ஆகவே ஆறுவாரத்திற்குள்ளாக தலைவர் சிவாஜியிட மிருந்து சிப்பாய்களை அழைத்துவர வேண்டும். இந்த ஆறு வாரங்கள் கழிந்து விட்டு, சேனையும் வரவில்லையானால், அந்தோ ஆபத்துதான். கோட் டையில் உள்ளவர்களெல்லோரும் பட்டினி கிடந்து சாகவேண்டியது தான். கோட்டையும் சுலபமாக முகம்மதியர்கையில் சிக்கிவிடும். ஆகை யால், நட்டாஜி! கோட்டையின் நிலைமை எவ்வளவு கேவலமாக இருக்கிற தென்பதை யோசித்துப்பார். உன் வேலையில் ஒரு நிமிஷமும் தாமதிக் கக் கூடாது" என்றார் திரியம்பகராவ்.

"இல்லை. இல்லை. என்னால் எவ்விதத்திலும் தடை ஏற்படாது ஆனால், ஒருவேளை, தீவினைப் பயனாக நமது விரோதிகள் கையில் நான் சிக்கிக் கொண்டால்?.........

"ஓ! ஆபத்து, ஆபத்துதான். அதனல்தான் உன்னை இக்காரியத்துக்கு நியமித்திருக்கிறேன். உன் சாமர்த்தியத்தை இன்று காலையில் யுத்தகளத்தில் நான் பார்க்க வில்லையா? நீ உன் சாமர்த்தியத்தினல், எதிரிகள் கையில் சிக்கிக் கொள்ளாமல் காரியத்தை நிறைவேற்றுவாய் என்று எனக்குத் தெரியும். கடவுள் உனக்கு உதவி செய்வார்" என்ருர் திரியம்பகராவ்.

"ஆம். இந்த நல்ல காரியத்துக்கு, தேசிய விடுதலைக்குக கடவுள் கட்டாயம் உதவி செய்வார் என்று நான் உறுதியாக நம்பியிருக்கிறேன். இப்பொழுது விடை பெற்றுக் கொள்கிறேன். சாப்பிட்டுவிட்டுப் புறப்பட நேரம் சரியாக இருக்கும்" என்று சொல்லி அவரிடம் விடைபெற்றுக் கொண்டு தன் இடம் சென்ருன் நட்டாஜி.

10-ம் அத்தியாயம்.

தேசீயத் தூதன்

முன் அத்தியாயத்தில் கோட்டைக்குள் மகாராட்டிரர்கள் என்ன செய்தார்களென்பதைக் கூறினேம். அதே சமயத்தில் கோட்டைக்கு வெளியில் பீஜப்பூர் சிப்பாய்கள் என்ன செய்தார்கள் என்பதைக் கவனிப்போம்.

அன்று நடுப்பகலில் பீஜப்பூர் சிப்பாய்கள் தங்கள் தலைவனை "சித்தி ஹுசேன்" என்னும் நீக்ரோவ வீரன் உள்பட பல வீரர்களை இழந்துவிட்டதோடு மகாராட்டிரர்களால் துரத்தப்பட்டுத் தங்கள் இடம் போய்ச் சேர்ந்தார்கள். நீக்ரோவன் இறந்துவிட்டது அவிஸ்கான் என்னும் முகம்மதியத்தலைவனுக்கு வலதுகை ஒடிந்துவிட்டதுபோலாயிற்று. ஆனல், அவன் சமயத்தில் தைரியத்தைக் கைவிடுபவனல்லன். இனி செய்ய வேண்டிய காரியத்சைப்பற்றி அவன் சிந்தித்தான். காலாட் சேனைகளை மறுபடியும் அனுப்பிச்சண்டை செய்வது நன்றல்லவென்று அவன் புத்திக்குப்பட்டது. அவன், உற்சாகமாகச் சில வார்த்தைகளைப் பேசி அவர்களை ஒய்வெடுத்து க்கொள்ளும்படி சொன்னன். ஆனல் பீரங்கி வீரர்களை அழைத்து மருபடியும் கோட்டைச்சுவர்களைத் தகர்த்துடைக்கும்படி கட்டளை யிட்டான். சில நாழிகைக்குள் பீரங்கி வெடிகள் இடிமுழக்கம் போல் கணீர் கணீர் என்று வெடித்தன. இப்பீரங்கிப்போர் இரண்டு மூன்று நாழிகை வரையில் நடைபெற்றது. ஆனல், கோட்டையிலிருந்து மகாராட்டிரர்கள் இவர்களை எதிர்க்கவில்லை. அது மாத்திரமல்ல. வேறு எவ்விதமான எதிர்ப்புகளையும் மகாராட்டிரர் செய்யவில்லை. உண்மையி

லே கோட்டை சந்தடி யற்றிருந்தது. இதைக்கண்டு முகம்மதியருக்கு ஆச்சரியமாய்விட்டது. மகாராட்டிரர்கள் எதிர்க்காமலிருப்பதின் காரண மென்ன? அவர்களிடம் வெடிகுண்டுகள் இல்லையா? அல்லது, சும்மா பதுங்கியிருந்து காலாள் சேனை மதிலண்டை சென்றால் மேல் வீழ்ந்து துரத்தியடிக்க இவ்வித தந்திரம் செய்கிறார்களா? என்று முகம்மதியர் கள் சந்தேகங் கொண்டார்கள்; ஆயினும், உண்மை யறியாமல் மேலும் மேலும் பீரங்கிகளை வெடித்துக் கொண்டே யிருந்தார்கள். கடைசியாக பொழுதுபடும் வேளையில், மகாராட்டிரர்கள் கோட்டைக்குள் இல்லை யென்றும், எல்லோரும் உள் கோட்டையில் போய் ஒளிந்துகொண்டார்க ளென்றும், வெளிக்கோட்டை பாதுகாக்கப்படாமல் கைவிடப்பட்டதென் றும் எவ்விதமாகவோ தெரிந்துகொண்டார்கள். உடனே, அவ்வுண்மை யை அறிந்து வரும்படி சில சிப்பாய்கள் அனுப்பப்பட்டனர். பீரங்கி வீரர் களுக்கும் தங்கள் வேலையை நிறுத்தும்படி கட்டளையிடப்பட்டது.

கோட்டைக்கு உளவறியச் சென்றவர்கள் ஒரு நாழிகைக்குள் திரும்பி வந்து கோட்டையில் ஒருவரும் காணப்படவில்லையென்றும், எல்லோரும் உள் கோட்டைக்கு போய் விட்டார்களென்றும் செய்தி தெரிவித்தார் கள்.

உடனே அவிஸ்கான், சிப்பாய்களெல்லோரும் கோட்டைக்குள்போய் அதைக்கைப் பற்றிக்கொண்டு அவ்விடத்தில் கூடாரங்களை யடிக்கும்படி கட்டளை யிட்டான். இரண்டு நாழிகைக்குள் முகம்மதிய சிப்பாய்களெல் லோரும் பீரங்கி முதலிய சாமான்களை யெடுத்துக்கொண்டு இராஜமாட் சிக்கோட்டைக்குள் போய்விட்டார்கள். இவர்கள் கோட்டைக்குள் சென் றபோது பொழுது போய்விட்டது. இருள் பரவத்தொடங்கிவிட்டது. வானத்தில், நக்ஷத்திரங்கள் ஒவ்வொன்றாக வெளிப்பட்டு மின்னுகின்றன. நிலாவெளிச்ச மில்லாதபடியால் எங்கும் இருளாகவே யிருக்கிறது. வெளிக் கோட்டையைக் கைப்பற்றிக்கொண்ட முகம்மதிய சிப்பாய்கள் இன்னும் கூடாரமடித்து அமர்ந்து விடவில்லை. அவர்கள் இன்னும் சுறுசுறுப்பாக வே வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். சில உயர்தர சிப்பாய்கள் தங்களுக்குக்கீழுள்ள வீரர்களுக்குச் சில வேலைகளைச்செய்யக் கட்டளை கொடுத்துக் கொண்டும், சிப்பாய்கள் வேலை செய்வதை மேல்பார்த்துக் கொண்டு மிருந்தனர். ஒரு பகுதி சிப்பாய்கள் கூடாரங்களை அடித்துக் கொண்டிருந்தனர். சில பகுதியார் சிப்பாய்களுக்கு இராச்சாப்பாட்டைச் சமைத்துக் கொண்டிருந்தனர். சிலர் குதிரைகளைக் கவனித்துக் கொண் டிருந்தனர், ஒருவராவது சும்மா இருக்கவில்லை.

இவ்விதம் சிப்பாய்கள் வெளிக்கோட்டையில் சுறுசுறுப்பாக வேலை செய்து கொண்டிருந்தபோது ஸ்ரீவர்த்தனம் (திருவளர்குன்றம்) என்னும் உள்கோட்டையின் மதிற்சுவரின் மேல் ஒரு சிப்பாய் காணப்பட்டான். அவன் மதிலின் மேல் உட்கார்ந்தபடியே நாற்புறமும் சுற்றிப்பார்த்தான். ஒருவரும் அருகில் இல்லையென்று தெரிந்த வுடன் திருட்டுத்தனமாக மெல்ல வெளியே குதித்தான். உடனே சரேலென்று ஓடி அருகிலிருந்த மரங்களின் கீழ்ப்போய் நின்றான். இப்படி வந்து நின்றவன் ஒரு முகம்மதிய சிப்பாய்போல் தோன்றுகிறது. ஏனென்றால், இவன் உடைகள் முகம்மதிய சிப்பாய்களின் உடை யாகவே இருக்கின்றன. மரத்தடியில் வந்த வுடனே இன்னுமொரு முறை நாற்புறமும் சுற்றிப்பார்த்தான். எங்கும் இருள் மூடிக்கொண்டிருந்த போதிலும் சிப்பாய்கள் கூடாரங்களை யடித்துக்கொண்டு சுறுசுறுப்பாய் வேலை செய்து கொண்டிருப்பது அவனுக்குத் தெரிந்தது. அவன் "ஆ! இரவு அனுகூலமாகத் தான் இருக்கிறது. அவர்கள் இன்னும் தங்கள் வேலையைக்கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் சிப்பாய்களைப்பாரா நிறுத்தவில்லை. ஆனால், ஆ! அவர்கள் மத்தியில் புகுந்துதான் போக வேண்டியிருக்கிறது. வேறு வழியில்லை" என்று தனக்குள் மெல்ல சொல்லிக்கொண்டான். பிறகு சற்று நேரம் சிப்பாய்களைக் கவனித்துக் கொண்டே யிருந்து, திடீரென்று ஓசைபடாமல் ஓடி சிப்பாய்கள் வேலை செய்து கொண்டிருக்குமிடத்தை யடைந்தான், அவனை ஒருவரும் கவனிக்கவில்லை. இதுவரையில் குற்றஞ் செய்த கள்ளனைப் போல் இருந்த அவன், சிப்பாய்களண்டைச் சென்றதும் கம்பீரமாகத் தலை நிமிர்ந்து மிடுக்காக நடந்தான். சிப்பாய்களிடையில் ஒரு பெரிய உத்தியோகஸ்தனைப்போல அவன் சுறுசுறுப்பாக நடக்கிறான்.

இவ்விதம் முகம்மதிய வீரனைப்போல் ஆடை யணிந்து அவர்கள் மத்தியில் சூதாகச் செல்லும் இவன் யார். அவன்தான் நட்டாஜி என்று நமது வாசகர்கள் அறிந்து கொண்டிருப்பார்கள். ஆம். அப்படிச் செய்கிறவன் நமது நட்டாஜிதான். அவன் இப்போது சிவாஜியிடம் தூது செல்கிறான். முகம்மதியரால் சந்தேகிக்கப்படாதபடி அவன் அயூப்கானுடைய உடைகளை அணிந்து ஒரு முகம்மதிய வீரனைப்போல் காணப்படுகிறான். இருண்ட இரவும், சிப்பாய்கள் தங்கள் தங்கள் வேலையில் கவனமாயிருப்பதும், அவன் அணிந்திருக்கும் முகம்மதிய சிப்பாயின் உடுப்பும் அவனுக்கு இப்போது உதவியாயிருக்கின்றன. அவனுக்குச் சற்று அச்சந்தோன்றிய போதிலும் தைரியத்தைக் கைவிடவில்லை. சிப்

பாய்கள் சமயல் செய்து கொண்டிருக்கும் பக்கத்தில் சற்று வெளிச்சமாயிருக்கிறபடியால், அவன் அந்தப் பக்கம் செல்லாமல் இருட்டு உள்ள பக்கமாகப் போகிறான். எல்லோரும் அவனை ஒரு முகம்மதிய வீரன் என்றே நினைத்து விட்டார்கள். அவர்கள் வேலையில் கவனமாக விருந்தபடியால் ஒருவராவது அவன் முகத்தைப் பார்க்கவில்லை. நட்டாஜி ஒன்றையுங் கவனியாமல், ஏதோ அவசியமான காரியமாய்ச் செல்லும் உத்தியோகஸ்தன் போல வேகமாக நடந்தான். அப்பொழுது சமையல் செய்யப்படும் "புலால்" வாசனை கம்மென்று வீசியது. நட்டாஜி வேகமாக, ஒருவரும் சந்தேகிக்காதபடி நடந்து சிப்பாய்களைக் கடந்து அப்பால் போய்விட்டான். பிறகு சுலபமாக கோட்டைச்சுவருக்கு வெளியே போய் நின்றான். இவ்விடம் வந்த பிறகுதான் அவன் சரியானபடி மூச்சு விட்டான். இப்பொழுதுதான், இனி பயமில்லை யென்று தோன்றிய பிறகுதான், தன் மீதிருந்த ஒரு பெரும் பாரம் இறக்கப் பட்டது போல் தன் நிலையடைந்தான். ஆனால், இரண்டடி நடப்பதற்குள் தன் எதிரில் நான்கு மனிதர் வருவதைக் கண்டு திடுக்கிட்டான். தைரியத்தைக் கைவிடாமல் சற்றுக் கூர்ந்து நோக்கினான். உடனே தைரியமடைந்தான். அவ்விதம் வந்தவர்களில் இருவர் மகாராட்டிரக் குடியானவர்கள். அவர்கள் தலைமீது சுமக்க முடியாத பெரிய புல் கட்டுகள் இருந்தன. அவர்கள், தங்கள் கையிலுள்ள தடியினால் தலை மேலுள்ள புல் சுமைகளைத் தாங்கிக் கொண்டு கஷ்டத்தோடு நடந்து வருகிறார்கள். அவர்களுக்குப் பின்னால் இரண்டு முகம்மதிய சிப்பாய்கள், அவர்களைச் சீக்கிரமாக நடக்கும்படி மிரட்டி நடத்திக் கொண்டு வருகிறார்கள். அவ்வேழைக்குடியானவர்கள் சிப்பாய்களைப் பார்த்து தாழ்மையாக பரிதாபமான குரலோடு "ஐயா! எங்களை அடிக்காதீர்கள். பளுவு அதிகமாயிருக்கிறபடியால் சீக்கிரமாக நடக்க முடியவில்லை." என்று கெஞ்சிக்கேட்கிறார்கள். சிப்பாய்கள், அதற்குப்பதிலாக அக்குடியானவர்களைக் கண்டபடி வைது "சீக்கிரம் நடங்கள்" என்று தங்கள் கையிலிருந்த சவுக்கால் அடித்தார்கள். அவ்வேழை மனிதர்களோ அடியுண்ட நோயோடு பாரமான சுமையைத் தாங்கிக் கொண்டு வியர்வை சொட்டச் சொட்ட மூச்சு திணரிக்கொண்டு தங்களால் கூடியவளையில் வேகமாக நடக்கிறார்கள். இப்பரிதாபமான காட்சியைக்கண்ட போது நட்டாஜிக்கு ஆத்திரம் வந்துவிட்டது; கோபம் பொங்கிற்று. அவன் தன் உண்மை நிலையை மறந்தான். தன் சகோதரர்களில் இருவர், முகம்மதியர்களால் அநியாயமாக மிருகங்களைப்போல் நடத்தப்படுவதும் வசைமொழி பெறுவதும்

அவனல் பொறுக்க முடியவில்லை. உடனே அவன் இவர்கள் அருகில் சென்று, தான் ஒரு முகம்மதிய உத்தியோகஸ்தன் என்னும் பாவனையோடு அச்சிபாய்களைப் பார்த்து குடியானவர்களை அன்பாக நடத்தும்படி கட்டளை யிட்டான். அவர்கள், அவனுடைய அதிகாரமான குரலினுலும் அவன் உடுத்தியிருந்த உயர்தர உடுப்பினுலும் அவனைப் பெரிய உத்தியோகஸ்தனென்று மதித்து உடனே அவன் கட்டளைக்குக் கீழ்ப்படிந்தார்கள். ஆனல் அவர்களில் ஒருவன் சற்று தைரியங்கொண்டு, 'என் ? எங்கள் வேலையைத்தானே நாங்கள் செய்கிறோம்? நமது குதிரைகளுக்குப் புல் கொண்டு போகிறோம். இந்தப் பசுவைக் கும்பிடும் இந்துக்களுக்கு நீர் ஏன் பட்சங்காட்டவேண்டுமென்கிறீர் ? இவர்களுக்கும் எருதுகளுக்கும் என்ன வித்தியாசம் " என்று தைரியமாகக் கேட்டான்.

நடட்ாஜி சமயோசிதமாகக் கோபத்தோடு அவனைப் பார்த்து, " ஆ, இருக்கட்டும். உங்கள் நடத்தையைப்பற்றி அவிஸ்கானுக்குத் தெரிவிக்கிறேன். நம் அரசருடைய ஜனங்களை இப்படியா கேவலமாக நடத்துவது ? நல்லது. உங்களுக்குத் தகுந்த தண்டனையைக் கொடுக்கச் சொல்லுகிறேன் " என்று அதிகாரதோரணையாகப் பேசினன்.

இதைக் கேட்டவுடனே அந்த முரட்டுச் சிப்பாய் களிருவரும் வாய் விட்டுக் கல்லென்று சிரிததார்கள். பிறகு, அவர்களில் முதல் பேசியவன், " அவிஸ்கானிடத்தில் எக்களைப் பற்றிச் சொல்லித் தண்டிக்கப் போகிறாயா ? என் ? நேற்று கண்டாலா கிராமத்தில் இருந்தபோது, தானியத்தை யொளித்து வைத்திருக்கும் இடத்தைக் காட்டும்படி, அவ்வூர்க்குடியானவர்கள் பத்துப் பன்னிரண்டு பேரை, அவர் சவுக்கால் அடித்து ஈட்டி முனையினல் கீறினரே ! அதை நீர் பார்க்கவில்லைபோலிருக்கிறது ?" என்று பரிகாசமாகக் கேட்டான்.

அச்சமயம், அருகிலிருந்த மற்றச் சிப்பாய் தன்கையிலிருந்த லார்ந்தர் விளக்கை நட்டாஜியின் முகத்தில் வெளிச்சம் படும்படி தாக்கிப்பிடித்தான். உடனே அவ்விரண்டு சிப்பாய்களுக்கும் உண்மை விளங்கிவிட்டது. எப்படி யென்றால், நட்டாஜியின் நெற்றியில் சந்தணங் காணப்பட்டது. நட்டாஜி தன் நெற்றியிலணிந்திருந்த சந்தணப் பொட்டைக் கலைக்க மறந்துவிட்டான். உடனே அம் முரட்டுச் சிப்பாய்கள் " ஆ !" என்று கூச்சலிட்டு " இவன் நம்மவன் அல்லன் ; மகாராட்டிரன். தேசீயக் கட்சியின் உளவறியும் ஒற்றன் " என்று சொல்லிக்கொண்டே நட்டாஜிமேல் பாய்ந்தார்கள். இதற்குள், இவர்கள் பேசியதை யெல்லாங் கேட்டுக் கொண்டிருந்த இரண்டு குடியானவர்களும், உ.த்தியோகஸ்தன்போல்

காணப்படுபவன் உண்மையிலேயே தங்களைச் சேர்ந்த மகாராட்டிர னென்று கண்டு கொண்டார்கள். உடனே அவர்களுக்குத் தைரியம் வந்து விட்டது. ஆகவே, முகம்மதிய சிப்பாய்கள் நட்டாஜி மேல் பாய்ந்த போது, அவர்கள் தங்கள் தலை மீதிருந்த புல் பொதிகளை சிப்பாய்கள் மீது எறிந்துவிட்டு கையில் தடியைப் பிடிததுக் கொண்டு நட்டாஜியின் இருபுறத்திலும் நின்று, சிப்பாய்களை எதிர்க்க ஆயத்தமாயிருந்தார்கள். இதனால் சிப்பாய்களின் எண்ணம் பலிக்கவில்லை. அவர்கள் நட்டாஜியைக் கைதியாக்க வேண்டு மென்று நினைத்த எண்ணம் தலை கீழாய் மாறிவிட்டது மன்றி எதிர்கட்சி பலமடைந்து விட்டதைக் கண்டு திகைத்து நின்று விட்டார்கள். மூன்றுபேரை இரண்டு பேர் எதிர்ப்பது கூடாதகாரிய மென்று அறிந்தவுடன் அவர்கள், சற்று தூரத்தில் வேலை செய்து கொண்டிருக்கும் சிப்பாய்களைத் துணைவரும்படி கூவியழைத்தார்கள்.

நட்டாஜி, அவர்களை எதிர்க்கும்படி குடியானவர்களுக்குக் கட்டளையிட்டுத் தானும் சிப்பாய்களை எதிர்த்தான். இதற்குள் கோட்டைக்குள்ளிருந்து சிப்பாய்கள் ஓடிவரும் காலடிச் சத்தம் கேட்டது. அப்படி வருபவர்கள், தங்களால் எதிர்கமுடியாதபடி பெருந்தொகையுள்ளவ ரென்றுங் காணப்பட்டது. அவர்கள் சமீபத்திலும் வந்துவிட்டதாகத் தெரிந்தது உடனே, குடியானவர்களில் ஒருவன், "இனி முடியாது. ஓடிவிடுவோம் இல்லாவிட்டால் ஆபத்துதான்" என்று சொல்லி முன்னே ஓடினான் இதற்குள் துணைக்கு ஓடிவரும் சிப்பாய்கள் மிகச் சமீபத்தில் வந்துவிட்டார்கள் இச்சமயத்தில் நட்டாஜியும் தப்பி ஓடாவிட்டால் அவன் கட்டாயம் முகம்மதியரிடம் அகப்பட்டுக் கொள்ள வேண்டியதுதான். அகப்பட்டுக் கொண்டால், அவன் சிவாஜியிடம் தூது செல்லும் முக்கியமான விஷயம் கெட்டுப்போகும். இதன் பலான இராஜமாட்சிக் கோட்டை முகம்மதியர் கையில் சிக்கிவிடும் தேசீயக் கட்சிக்குச் சொந்தமான—ஒரு முக்கியமான—கோட்டை கைவிட்டுப் போய்விடுமானால், தேசீயக் கட்சிக்கு எவ்வளவோ பலம் குறைந்து விடும். இந்த யோசனைகள் நட்டாஜியின் மனதில் அம்புபோல் சுறுக்கென்று தைத்தது. உடனே, நட்டாஜி சிப்பாய்களைத் தாக்குவதை விட்டுக் குடியானவர்களைப் பின் தொடர்ந்து மான்போல் பாய்ந்து ஓடினான். இதற்குள் முகம்மதிய சிப்பாய்களும் அவ்விடம் வந்தார்கள். நடந்த செய்தியை யறிந்தவுடனே, தப்பி யோடும் மகாராட்டிரர்களைப் பிடிக்க அவர்கள் வேட்டை நாய்களைப் போல் தொடர்ந்து பாய்ந்தோடினார்கள்.

நட்டாஜி

காலமோ காரிருள் கவிந்த இருட்டு. இடமோ குத்துச் செடிகளும் புதர்களும் மரங்களும் அடர்ந்த காட்டு வழி, கொஞ்சதூரம் முகம்மதிய வீரர்கள் அவர்களைத் துரத்திக் கொண்டு போனார்கள். காட்டுவழிகளை நன்கறிந்த குடியானவர்கள் செடிகளின் சந்து பொந்துகளில் புகுந்து ஓடியபடியால், அவ்வழிகளை யறியாத சிப்பாய்கள் இன்னொரு பக்கமாய் ஓடினார்கள். குடியானவர்கள் நட்டாஜியுடன் நெடுந்தூரம் ஓடிக்கடைசியாக ஒரு புதரில் மறைந்து கொண்டார்கள். அவ்விடத்தில் ஓசைபடாமல் சுமார் இரண்டு நாழிகை வரையில் உட்கார்ந்திருந்தார்கள். கடைசியாக, முகம்மதியர் தங்களைத் தொடர்ந்து வரவில்லை யென்று தெரிந்து கொண்டு எழுந்து நடந்தனர். குடியானவர்கள் அச்சுற்றுப் புறத்தில் வசிப்பவர்களாதலால், இருளடர்ந்த காட்டிலும் சரியான வழியிலேயே நடந்து சென்றார்கள். முடிவில் ஒரு மாஞ்சோலையடைந்தனர். இப்பொழுது இரவு நெடுநேரமாய் விட்டபடியாலும் அவர்கள் நெடுந் தூரம் ஓடிவந்த களைப்பினாலும் அடுத்த கிராமம் இன்னும் வெகுதூரம் இருப்பதாலும் அவ்விரவை அம்மாஞ் சோலையில் தங்கிக் கழிப்பதென்று முடிவு செய்து கொண்டனர். அவ்விதமே மூவரும் மாமரத்தடியில், கட்டாந் தரையில் படுத்துச் சில நேரத்திற்குள் நன்றாகத் தூங்கிவிட்டனர். தூங்கும்போது குடியனவர்கள் குறட்டை விடுஞ் சத்தம் அவ்விருட்டில் கேட்பதற்கு அச்சமாகவே யிருந்தது.

(தொடரும்)

ஒருவன் இராஜா வேஷம் போட்டு சபை முன் ஆடம்பரமாய் நடித்து விட்டு பின்னர் சாமான்ய மனிதனாகி விடுகிறானே, அதைப்போல், அதிகாரததிலிருப்பவர்கள் நினைக்கவேண்டும்.

* * *

புத்தியும் சக்தியும் வாய்ந்த வர்த்தகர்கள் அதிர்ஷ்டத்தை எதிர்பார்க்கவேண்டியதில்லை. அதிர்ஷ்டமே சக்தியும், யுக்தியுமாய் தன்னில் உதயமாகிறது. சுறுசுறுப்புள்ளவனுக்கு சந்தேகம் வேண்டாம்.

* * *

சீனத்தில் அநேக சங்கங்கள் இருக்கின்றனவாம். பிச்சைக் காரர்களுக்குக் கூடச் சங்கம் இருக்கிறதாம். ஒரு கடைக்காரன் எந்தப் பிச்சக்காரனுக்காவது பிச்சையிட மறுத்தால் பிச்சைக்காரச் சங்கத்திலிருந்து இன்னும் சிலர் சென்று பிச்சை கேட்பார்களாம். அப்படியும் அவன் மறுத்தால் பிச்சைக்காரர்கள் கூட்டமாக கலந்து அவன் கடையை வியாபரம் நடக்க வோட்டாமல் முற்றுகை போட்டு விடுவார்களாம். அவன் வாயைத் திறவாமல் பிச்சை கொடுத்தனுப்ப வேண்டியிருக்குமாம்.

மதுசாரம்

(காபிரைட்)

(ஸ்ரீமான் ஏ. சொக்கலிங்கம்பிள்ளை எழுதியது)

(முன் 280ம் பக்கத் தொடர்ச்சி)

VI

மதுசாரம் இரத்த அணுக்களைக் கெடுக்கிறது.

இரத்தமும் அதன் வேலையும்.

தேகத்திலுள்ள இரத்தமெல்லாம் இரத்தக்குழல்கள் அல்லது இரத்த நாடிகள் மூலமாயும் மிக நுட்பமான துவாரமுள்ள மயிரிழை போன்ற மெல்லிய சிறு நாடிகளி (Capillary) ன் மூலமாயும் பாய்கிறது.

இரத்தம், (1) ப்ளாஸ்மா (Plasma), (2) கார்பஸில்ஸ் (Corpuecles) பவைகளாலுண்டானது. ப்லாஸ்மா என்பது, வைக்கோல் நிறம் போன்ற தெளிவான திரவப்பொருள். அது, இரத்தத்தின் நீர்ப்பகுதியாகும். கார்பஸில்ஸ் என்பது, கோடிக்கணக்கான மாக்களிபோலும் வழுவழுப்பான அணுப்பொருள்கள். இவ்வணுக்கள், சிவப்பணுக்கள் வெள்ளையணுக்கள் என இரண்டு வகைப்படும் (Red and White Corpuscles).

சிவப்பணுக்கள்.

சிவப்பணுக்களைப் பார்ப்பதற்கு வியப்பாயிருக்கும். எனெனின், சிவப்பணுக்கள் உண்மையில் சிறிது மஞ்சள் நிறமானவை. ஆனால், அவற்றைக் கூட்டமாய்ப் பார்க்கும்போது, அவை, சிவப்பாகக் காணப்படுகின்றன. இரத்த அணுக்களுக்கு இச்சிவப்பு நிறம் இரத்தத்திலுள்ள ஹிமோக்ளாபினல் (Haemoglobin blood globe இரத்தக்கோளம்) உண்டாகின்றது. அதுவே தேகத்திலுள்ள ஒவ்வொரு சூக்குமரந்திரத்திற்கும் உயிர்வாயுவை உதவுகிறது. அவ்வணுக்கள், ஒருதளமான குண்டூசி (Thick pin) யால் செய்யப்பட்ட துவாரத்துள்ளே 10000 பிடிக்கக் கூடிய அவ்வளவு நுண்ணியவையாயிருக்கின்றன. ஒரு சன அங்குலமுள்ள பெட்டியில் சிவப்பணுக்களை நிரப்பினால் அதில் மொத்தம் 70,000,000.000 அணுக்களிருக்கும்.

இச்சிவப்பணுக்கள், எலும்புகளின் சிவப்பு மச்சை (Red marrow) யிலுண்டாகின்றன. இவ்வணுக்கள் இரத்த வோட்டத்தில் மிதந்து சென்று, சிறிது காலம் தங்கள் வேலையைச் செய்கின்றன. ஆனால் இவை கடைசியாக இறந்து, ஈரலிலும் (liver), மண்ணீரலிலும் (Spleen)

கலந்து போகின்றன. ஒவ்வொரு நாளும் தேகத்தில் 14நூறுயிரக் கோடி சிவப்பணுக்கள் இறந்து போய்ப் பல்லாயிரப் புதிய அணுக்களுண்டாகின்றன வென்று சொல்லப்படுகின்றது.

சிவப்பணுக்கள் என்ன செய்கின்றன.

சிவப்பணுக்கள் உயிர்வாயுவைக் கொண்டு போதலே அவற்றின் வேலையாம். ஏனெனின், ஒவ்வொரு உயிருள்ள பொருளும் இம்முக்கியமான வாயுவை மிகுதியாகக் கொள்ள வேண்டும். இல்லாவிடின், அவை மடியவேண்டியதே. ஆதலின், ஒவ்வொருவரும் நெடுஞ் சுவாசம் (Deep breathing) செய்ய வேண்டும். நல்ல காற்று வீசும்படி சன்னல்களைத் திறந்து வைத்து உறங்க வேண்டும். அநேக சனங்கள் சிற்றறைகளில் சன்னல்களையும் கதவுகளையும் நல்லகாற்று வீசுதற்கில்லாதபடி மூடிக் கொண்டு தூங்கி, க்ஷயரோகத்தால் இறக்கிறார்கள். ஆதலால், நம்மாற் கூடிய மட்டும் நல்ல காற்றுள்ள இடத்தில் வசிக்கவேண்டும். சனநெருக்கமும் கெட்ட காற்றுமுள்ள அறையை விலக்க வேண்டும். நாம் சுவாசிப்பதின் கருத்தென்ன ? உயிர்வாயுவை யுட்கொள்ளவும், தேகத்தி லுண்டாகும் விஷமுள்ள கரியமிலவாயுவை வெளியே கழிக்கவுமேயாம்.

நாம் சுவாசப் பையில் சுத்தமான காற்றை யிழுக்கும்போது, அங்கே பெருஞ் சேனையாகச் சிவப்பணுக்கள், உயிர்வாயுவான சுமையை யேற்றுக் கொள்ளக் காத்துக் கொண்டிருக்கின்றன. கடற்பஞ்சானது (Sponge) நீரை யுறிஞ்சுவதுபோல, ஹீமோக்ளாபின் (Haemoglobin) உதவியால் இரத்த அணுக்கள் உயிர்வாயுவை யுறிஞ்சுகின்றன. அவ்வாறு உறிஞ்சின இரத்த அணுக்கள் இரத்த வோட்டத்தில் மிதந்து போய்த் தேகத்தி லுள்ள ஒவ்வொரு சூக்குமரந்திரங்களுக்கும் உயிர்வாயுவை யுதவுகின்றன. இரத்தத்தின் நீர்ப்பகுதி (Plasma) கரியமிலவாயுவை யெடுத்துக் கொண்டு, அவ்வாயுதேகத்தை விட்டு வெளியேகழிப்பதற்குத் திரும்பவும் சுவாசப் பைக்குக் கொண்டுவருகின்றது. இரத்தத்திலுள்ள சிவப்பணுக்களும் புதிய உயிர்வாயுவைச் சேகரிப்பதற்குச் சுவாசப்பைகளின் மூலமாய்ச் செல்லுகின்றன. இப்படியே இக்காரியங்கள் சொற்ப நிமிஷந்தோறும் நடைபெறுகின்றன.

இரத்த அணுக்கள், அவற்றின் மேற்பரப்பின் மூலமாகவே உயிர்வாயுவை அதிகமாகக் கருஷிக்கின்றன. அவை அவ்வளவு நுண்ணிய அணுக்களாக இருப்பதற்குக் காரணமுண்டு. உன்னிடத்தில் ஒரு பவுண்ட் (1 lb.) நிறையுள்ள ஒரே பெரிய கோலியும், வேறு 40 சிறு கோலிகள் சேர்ந்து ஒரு பவுண்ட் நிறையுள்ளதும் இருக்கிறதாக வைத்துக் கொள்

கொள்வோம். இவற்றுள், ஒரே பெரிய கோலியிலிருக்கும் மேற்பரப்பைப் (Surface) பார்க்கினும் 40 கோலிகளின் அதிக மேற்பரப்பி (Greater Surface) ருக்கும், அதெப்படி? பெரிய கோலியை 40 துண்டுகளாக உடைத்துப்பார். அதினுடைய பழைய மேற்பரப்பு இருப்பதோடு, நீ யுடைத்த ஒவ்வொரு துண்டிலும் அதிகமான புதிய மேற்பரப்பு மிருக்கின்றதல்லவா? அதினாலே, சிறிய துண்டுகளில் அதிக மேற்பரப்பு இருக்கின்ற தெனத் தெரிந்து கொள்ள வேண்டும்.

உன்னிடத்தில் 12 அங்குலக்கன வடிவப் பொருளிருக்கின்றதாக வைத்துக் கொள். அதன் ஒவ்வொரு பக்கமும் 12×12 அல்லது 144 சதுர அங்குலப் பரப்பாகின்றது. ஆறு பக்கங்களுக்கும் $144 \times 6 = 864$ சதுர அங்குலப் பரப்பாகின்றது. இப்போது இந்த 12 அங்குலக் கன வடிவப் பொருளையே ஓரங்குலக் கனவடிவப் பொருள்களாக வெட்டினால் ஒரே கனவடிவப் பொருளுக்குப் பதிலாக 1728 சிறு சிறு கனவடிவப் பொருள்களாகின்றன ஆனல், மேற்பரப்பின் வித்தியாசம் எப்படி யிருக்கிறது பார்ப்போம். பெரியகனவடிவப் பொருளில் 864 சதுர அங்குலங்கள்தானிருக்கின்றன. ஆனல், ஒவ்வொரு கனஅங்குலச் சிறிய பொருளில் $1 \times 1 \times 6$ அல்லது 6 சதுர அங்குலங்களிருக்கின்றன. ஆகையால் $1728 \times 6 = 10368$ சதுர அங்குல மேற பரப்பிருக்கின்றன. அதாவது பெரிய கனவடிவப் பொருளிலுள்ள மேற்பரப்பைப் பார்க்கினும் சிறுகன வடிவப் பொருள்களில் 12 பங்கு அதிகமாக இருக்கின்றது.

தங்கள் இயக்கத்தில் மெதுவும் மந்த நடையுமுள்ள தேரை, பாம்பு முதலிய வற்றைப் போன்ற சில பிராணிகளின் இரத்த அணுக்கள் மிகப் பெரியனவாயிருக்கின்றன. ஆதலின், அப்பிராணிகளுடைய இரத்த அணுக்களின் மேற்பரப்புக் குறைவாகவே யிருக்கின்றது ஆதலால், அவைகளுக்கு உயிர்வாயு அதிகம் வேண்டுவதில்லை.

நமது தேகத்திற்கு விரைவாகவும் இலகுவாகவும் மிகுதியாகவும் ஓயாமலும் பிராணசக்தியைக் கொடுக்கும் உயிர்வாயுவை உதவும் பொருட்டு, இரத்த அணுக்களின் மேற்பரப்பை அதிகப்படுத்த, அவற்றை அதிநுண்ணியவைகளாக அமைத்திருப்பது எல்லாம் வல்ல இறைவனது அற்புதச் செயலேயாகும். மனிதனுடைய இரத்த அணுக்களின் மேற்பரப்பு அவனுடைய உடம்பு தோலின் முழுப்பரப்பு எவ்வளவு பெரிதோ, அதற்கு 3000 மடங்கு பெரிதா யிருக்கிறதென்று சொல்லப்படுகிறது. அதனை நாம் ஆழ்ந்து நினைக்கும் போது, அவ்வமைப்பு எவ்வளவோ ஆச்சரியகரமா யிருக்கின்றது. (தொடரும்)

லக்ஷ்மி

சந்தா விவரங்கள்.

இந்தியா, பர்மா, ஸிலோன் போன்ற உள் நாடுகளுக்கு வருட சந்தா	ரூ.	2	0	0
தென்னாபிரிகா, மலாய் நாடு, போன்ற வெளி நாடுகளுக்கு வருட சந்தா	ரூ.	2	8	0
ஜீவிய சந்தா (உள் நாடுகளுக்கு)	ரூ.	40	0	0
ஷை (வெளி நாடுகளுக்கு)	ரூ.	50	0	0

விளம்பர விகிதங்கள்.

முழுப்பக்கம் (மாதம் 1-க்கு)	ரூ.	8	0	0
அரைப்பக்கம் ஷை	ரூ.	4	0	0
கால்பக்கம் ஷை	ரூ.	2	8	0

சிறந்த வாசனை

ஊது வத்திகள் !

உயர்ந்த வாசனைத் திரவியங்களால், நவாப் தர்பாரில் கியாதி பெற்ற ஒருவரால் செய்யப்பட்டவை. இந்த வத்திகளை ஒரு முறை தருவித்து உபயோகித்துப் பார்ப்பீர்களாகில், மற்ற எந்த விதமான வத்திகளையும் வாங்க மாட்டீர்கள் என்று நிச்சயமாய் சொல்லுவோம். இன்றே ஆர்டர் செய்யுங்கள் ! சேர் ஒன்றுக்கு 24 ரூ. எடை. எட்டுக் கட்டுகளுடையது.

சவ்வாது வத்தி சேர்	1-க்கு	6—0—0
அம்பர் வத்தி ,,	1-க்கு	5—0—0
கிலீட் வத்தி ,,	1-க்கு	3—8—0
மட்டிப்பால் வத்தி,,	1-க்கு	2—0—0

K. S. MUTHIAH & Co.,
EXPORT DEPARTMENT,
Post Box No. 99, MADRAS.

HALF-TONE BLOCKS.

Copper 8 as. Square inch.

Zinc 6 as. Square inch.

LINE BLOCKES.

Copper 10 as. Square inch.

Zinc 4 as. Square inch.

Special Drawings if any will be charged. Charges for extra. Enlargement of photos and oil paintings On enquiry.

e Months Only

INNER 15" × 12" Rs 7-8 OUTTER 20" × 16"

SIZE

Send Your Photos for Bromide

Enlargements Highly Finished as Life Like

PRINCE STUDIO

ARTISTIC PHOTOGRAPHERS

HALFTONE BLOCK MAKERS.

90. W. RD. MOUNT ROAD. MADRAS.

மோட்டார் வண்டிகட்கு

யூனிவெர்ஸல் பாட்ரி



யூனிவெர்ஸல் பாட்ரி

பாட்ரி வேண்டும் போது அமெரிக்காவில் செய்யப்படும் பாட்ரிகளில் தலைமை ஸ்தானத்தை வகிக்கும் யூனிவேர்ஸல் பாட்ரி வாங்குங்கள். நாங்கள் உத்திரவாதம் எழுதித் தருகிறோம்.

இந்தியாவுக்கு சோல் ஏஜண்ட்கள் :—

ஸ்டாண்டர்ட் மோட்டர் எலேக்ட்ரிக் ஒர்க்ஸ்

மோட்டர் எலக்ட்ரிக் எஞ்சினீயர்கள், 33, மவுண்ட்ரோட், சென்னை.

30 வருடகாலமாய் உலக பிரசித்தி பெற்ற

வைத்யரத்ன பண்டிட் D. கோபாலாச்சார்லு அவர்களின்

ஜீவாமிருதம்

ஆரோக்கியத்தையும், தைரியத்தையும், உண்டாக்கும்.

பலத்தையும் உற்சாஹத்தையும், விருத்தியாக்கும்.

ரத்தத்தை விருத்தியாக்கும், மேகவாதநோய்களை போக்கடிக்கும், எல்லாவித பலஹீனங்களையும் போக்கும்ரோகிகளுக்கு நல்லது, மாரதிர்ச்சியை போக்கும், கற்பகாரகங்களை நீக்கும், குழந்தைகளுக்கும் கர்பவதிகளுக்கும் உத்தமம், முலைப்பாலை விருத்தியாக்கும், மூர்ச்சைகளுக்கு நல்லது மூளைக்கு வலுவை யுண்டாக்கும், நரம்புகளுக்கு வலிவை ஜாஸ்தி கொடுக்கும், வித்யார்த்திகளுக்கு பிராணமித்திர மானது, பிராண சக்தியை ஜாஸ்தியாக்கும் க்ஷய ரோகிகளுக்கு மிகவும் நன்று, காஸரோகிகளுக்கு அமுர்தம் போன்றது, மாருக்கு அதிகபலத்தை கொடுக்கும், ஸ்வாசப்பைகளுக்கு அதிக பலமுண்டாக்கும், உப்பஸ ரோகிகளுக்கு ரெம்பவும் ஹிதம்.

ஹிந்து தேசத்தில் நல்ல மூலிகைகளாலும், லோஹங்களாலும் தயார் செய்யப்பட்டது.

விலை புட்டி 1-க்கு ரூபா 3—4—0.

உபயோகவிதி மருந்துடனனுப்பப்படும்.

முழுவிபரம் அடங்கிய கேட்லாக் இனாமாய் அளிக்கப்படும்.

ஆயுர்வேதாஸ்ரமம்,

151, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, Post Box 287, Madras.

80 வருஷ காலமாக உலக பிரசித்திபெற்ற

அசல்

ஷண்முகம் பட்டணம்பொடி

காரம் மணம் நிறம் குணம் வாடை உள்ளது.

அநேக மெடல்கள் நற்சாட்சி பத்திரங்கள் பெற்றது.

ஷண்முகம் மூக்குத்தூள் கம்பெனி லிமிடெட,
போஸ்டு பாக்ஸ் 140, மதராஸ்.

80 வருஷக் காலமாக சென்னையிலே சிறப்பு வாய்ந்து ஆயிரக் கணக்கான நற்சாக்ஷிப் பத்திரங்கள் பெற்று தினசரி லெட்டர்களால் புகழ்பெற்று அன்றாடம் நூற்றுக் கணக்கான பார்சல்களை சோல் ஏஜண்டுகள் தினதோறும் மெயிலில் பெற்று, ஜில்லா, தாலூக்கா, டவுன், கிராமம் முதல் குக்கராமங்களிலும் கொண்டாடி, அசல் சேப்ரோல் வாடை, அசல் பசும் நெய் மணம், குளிர்ந்த குணம். இன்புறும் காரம், பவுன் நிறம் மனோரம்மியம் இவ்வாறும் ஒருங்கே அமையப் பெற்றதினால் ஷண்முகம் என பெயர் பெற்று நமது ஏஜண்டுகளுக்கு நற்கியாதி தந்து வியாபாரிகளுக்கு நற்பெயரளித்து உபயோகப்படுத்திய கனவான்களுக்கு மனோ பீஷ்டம் தந்து இந்தியாவில் ஏராளமாக செலவாகி வருவது எது ? எங்கள் அசல் ஷண்முகம் பொடியை வாங்கி உபயோகப்படுத்தி இன்புறுங்கள் !

பலம்.		விலை.			தபால்சிலவு.			பாக்கிங்.			மொத்தம்.		
8	ரூ.	1	0	0	0	5	0	0	1	0	1	6	0
20	,,	1	12	0	0	8	0	0	2	0	2	6	0

டாக்டர். ஆர். கே. பரிமள மூக்குத்தூள். இதனால் ஜலதோஷம், ஒற்றைத் தலைவலி, மண்டைகுததல், உள்பட கண்டத்திற்கு மேற்பட்ட 103 சகல வியாதிகள் வெகு சீக்கிரத்தில் கண்டிக்கப்படுமென்பதில் சந்தேகமே கிடையாது. காலணா சாதா மூக்குத் தூளுடன் இந்தத் தூள் இரண்டொரு சிட்டிகை மாத்திரம் கலந்தால் தூள் முழுவதும் சுகந்தமாய் விடும்.

1-புட்டி 1-க்கு அணா 4. டசன் புட்டிகள் ரூ. 2-4-0.
ஒரு சேர் டின் ரூ. 1-8-0.

இதர சாமான்கள் வேண்டுமானால் எங்களுக்கு விலை விபரம் எழுதவும்.

ஷண்முகம் மூக்குத்தூள் கம்பனி, (லிமிடெட்)
போஸ்டு பாக்ஸ் 140, மதராஸ்.

A. S.

எ. எஸ். சுகந்த மூக்குத்தூள்.

ஒரு சிட்டிகை எடுத்து காலணு மூக்குத்தூளுடன் கலந்தால் அதிக இன்பமான சுகந்த வாசனையைத் தரும். கண்டத்துக்குமேற்பட்ட 96 வியாதிகளைக் கண்டிக்கும். இந்தத் தூள் எக்காலமும் கெடாது. எந்தக் கம்பெனிகளிலாவது வாங்குபவர்கள் எ. எஸ். மார்க்கைக் கவனித்து வாங்கவும்.

எ. எஸ். சுகந்த மூக்குத்தூள் புட்டி 1-க்கு அணு 4 டிடஜன் 1-க்கு ரூ. 2-4 டி சேர் 1-க்கு ரூ. 3.

எம். ஜெ. பரிமள மூக்குத்தூள் புட்டி 1-க்கு அணு 3 டிடஜன் 1-க்கு ரூ. 2 டி சேர் 1-க்கு ரூ. 1-8.

போன் வெள்ளி மெடல்கள் பெற்ற

எ. எஸ். முகம்மத் சம்சுத்தீன் சாயபு,

106, சவுக்கார் பேட்டை, தபால் பெட்டி நெ. 1201, மதராஸ்.

கையிலிருந்தாலும் அழகு !

பன்னிரு இதழ்களையும் ஒன்ருய்ச் சோத்து பைண்ட் செய்யப்பட்ட "லக்ஷ்மீ" ஆண், பெண், சிறியோர். பெரியோர் முதலிய யாவரும் படித்து இன்புறக்கூடிய, கதைகள், நாவல்கள், பாடல்கள், ஹாஸ்யக் குறிப்புகள் முதலியவை அடங்கி யிருக்கின்றன. லக்ஷ்மியின் சந்தா நேயர்களுக்கும் பயன்படக்கூடியது. இன்றே ஒன்றுக்கு ஆர்டர் செய்து வரவழைத்து, உங்கள் வாசக சாலையை அழகுப்படுத்துங்கள்.

1-வது வால்யம் விலை ரூ. 3—0—0.

3-வது வால்யம் விலை ரூ. 3—0—0.

லக்ஷ்மி ஆபீஸ்,

தபால் பெட்டி, ⁖ ⁖ சென்னை,

குழந்தைகளை : :

: : நேசியுங்கள் !

அழுகிற குழந்தைகளை அடிக்கவேண்டாம். உங்கள் அருமைக்குழந்தைகளை, எப்பொழுதும் குதூகலப்படுத்த நமது "விளையாட்டு சாமான்கள்" செட் ஒன்றை வாங்கிக் கொடுங்கள். குழந்தைகளின் மனதை ரம்மிக்கச் செய்யும், இந்தியர்களின் வீட்டில், சமையல் செய்யும் பாத்திரங்களைப்போன்றவடிவுள்ளவை, ஒவ்வொரு ஜோடிப்பிலும் 32 சாமான்கள் அடங்கியிருக்கின்றன, அவை முற்றிலும் பித்தளையினால் செய்யப்பட்டு, மிகுந்த அழகோடிருக்கும். இந்த விளையாட்டு சாமான்கள், இந்துக்களாலும், மகமதியர்களாலும், கிறிஸ்தவர்களாலும், ஆங்கிலேயர்களாலும் மதிக்கப் பெற்றவை

நெ. 1 செட் 1-க்கு விலை ரூ. 4—8—0

நெ. 2 ,, ,, விலை ரூ. 3—4—0

கே. எஸ். முத்தையா கம்பெனி,

ஸில்க் ஹவுஸ் : :: காசி

உபயோகித்து ஸ்திரீகளுக்கு சுகப்பிரசவசஞ்சீவியெனமதிக்கப்பட்ட

சுகப்பிரசவ மாத்திரைகள்.

அபாயமின்றி அதி சீக்கிரத்தில் வேதனையில்லாமல் சிசுவை ஆரோக்கியமாய் பிறக்கச் செய்கிறது.

(நியோ ஈசி டெலிவரிபில்ஸ் Neo Easy Delivery Pills.)

புட்டி 1-க்கு ரூ. 2—0—0.

நியோ பால்டு க்யூரா. Neo Bald Cura.

(நியோவழுக்கை நிவாரணி)

தலை வழுக்கை, முக வழுக்கை, சொட்டை, சுண்டு, முதலிய வற்றை எவ்வளவு நாள் பட்டதாயினும் நிவர்த்திக்கும், மயிரை அடர்ந்து தடித்து வளரச் செய்யும், மயிர் விழுவதை நிறுத்தும். அநேகரால் உபயோகித்து குணமடையச் செய்த சிறந்த சிரோ ரோக நிவாரணி. புட்டி 1-க்கு ரூ. 1—8—0.

நியோ பிலட் டானிக் Neo Blood Tonic.

(நியோ இரத்த சுத்த விருத்தி திரவம்.)

கெட்ட ரத்தத்தை சுத்தி செய்து திரேக பலத்தையும், ஆரோக்கியத்தையும் தரக்கூடியது. புட்டி 1-க்கு விலை ரூ. 3-8-0.

நியோ கால்ரா ட்ராப்ஸ் Neo cholera Drops.

(காலரா நிவாரணி)

இரண்டொரு தடவை கொடுத்தவுடன் மலப்போக்கை நிறுத்தி சொஸ்தப் படக்கூடிய ஓர் கைகண்ட சிறந்த ஔஷதம். விலை புட்டி 1-க்கு ரூ. 1—4—0.

நற்சாக்ஷிப் பத்திரங்கள்.

Neo Scientific Pharmacy—ல் கிடைக்கும் Easy Delivery Pills களை நான் என் குடும்பத்தில் இரண்டு பிரசவங்களுக்கு கொடுத்ததினால் ஷை மாத்திரைகள் மிகவும் சுகமாகவும் குழந்தைக் கும் தாயாருக்கும் யாதொரு அபாயமுமின்றி சீக்கிரத்தில் குழந் தையை வெளியாக்குகிறது. நான் இதுவரையில் இவ்வளவு சுக மான மாத்திரைகள் பார்த்ததில்லை. இந்த மாத்திரைகளுக்கு சுகப்பிரசவ சஞ்சீவினி என்றும் பெயர் கொடுக்கலாம்.

(Sd) S. ராஜம் அய்யர், மிட்டாதர்ர், பானும்பட்டு.

கிடைக்குமிடம் :—

Neo Scientific Pharmacy, Villupuram S. I. Ry.

நியோ சயின்டிபிக் பர்மசி, விழுப்புரம்.

ஏஜண்டு:——மேசர்ஸ் தாதா அண்டு கோ.,

சைனாபஜார் ரோட், மதறாஸ்

ஸ்ரீ முனியோவா

சில்க் அங்கவஸ்திரம்.

அழகான இமிட்டேஷன் சில்க், கலருக்கு உத்திரவாம்த வண்ணானுக்குப் போடலாம். நேர்த்தியான பட்டுக்குஞ்சம் கட்டியது. பச்சை, ரோஸ், ஆரஞ்சு, வெள்ளை, பிங், புளூ முதலிய பல கலர்கள்.

5 முழம் பட்டு 1-க்கு விலை ரூபா 2—4—0.

விலை ரூபாய் இரண்டேகால்தான். உடனே எழுதுங்கள்.

☞ இதுவரை, 6-மாதத்திற்குள் 50,000, அங்கவஸ்திரங்கள் விற்பனையாகி யிருக்கின்றன. ஒன்று வாங்கினவர்கள் திரும்ப மறு ஆர்டர் ஒரு டஜனுக்குச் செய்கிறார்கள்.

கே. எஸ். முத்தையா கம்பெனி,

தபால் பெட்டி 99, சென்னை

நூல் புடவையிலும் ஓர் நூதனம்!

கராச்சி நூல் புடவைகள்

அழகான ஜரிகை முகதலையுடன் கூடியது. தினசரி சலவை செய்து உபயோகிக்கலாம், ரூ. 80—100—விலையுள்ள புடவைகளிலிருக்கும், கரைகள்போல் ஜரிகையினால் கொடி செடி போட்டது. சிகப்பு, அரக்கு, பச்சை, கருப்பு, புளூ, ஸ்னப் முதலிய கலர்கள். கலருக்கு உத்திரவாதம்.

18 மு × $2\frac{1}{2}$ அகலம் புடவை 1-க்கு விலை ரூ. 12.

K. S. Muthiah & Co.

Post Box 99, : : MADRAS.

21036

கராச்சி பேட்டர்ன் சில்க் புடவை

இந்தப் புடவையின் உடல் சாதா, விளிம்புக் கரைக்கு ஜரிகையினால் "கிளாவர்" "உத்ராக்ஷம்" "சங்கிலித் தொடர்" முதலியவை மாதிரி நெசவு செய்தது. முகதலைக்கு 4'' ஜரிகை பட்டைக் கரை யுள்ளது. சிறிய கரையுள்ள புடவைகளை விரும்பும் ஸ்திரீகளுக்கு இந்தப் புடவை மிகுந்த திருப்தியையும், சந்தோஷத்தையும் கொடுக்குமென்பதில் சந்தேகமில்லை!

No. 1.	16 மு x 44 இஞ்சி புடவை	1	ரூ.	38—0...0
	18 மு x 44 இஞ்சி ,,	1	ரூ.	44—0—0
No. 2.	16 மு x 44 இஞ்சி ,,	1	ரூ.	30—0—0
	18 மு x 44 இஞ்சி ,,	1	ரூ.	36—0—0

பெங்களூர் பேட்டர்ன் புடவை

பெங்களூர் புடவை மாதிரி 4 கரையும் முகதலையு முள்ளது. உடல் நெசவு அழுத்தமா யிருப்பதோடு மிருதுவாகவும், பளபளப்பாயு மிருக்கும். கரையில் இரட்டை ஜரிகை உத்ராக்ஷம் திராக்ஷைக் கொடி (Lacha) முதலியவை நெசவு செய்யப்பட்டது.

16 மு x 44 இஞ்சி புடவை	1	ரூ.	52—0—0
18 மு x 44 இஞ்சி ,,	1	ரூ.	60—0—0

இன்றே ஆர்டர் செய்யுங்கள்.

K. S. MUTHIAH & CO.,

EXPORT DEPARTMENT

Post Box 99, **MADRAS.**

Show room 287, Esplanade. ***Phone: No. 2693.***

முத்தையாஸ் - -

- நியூமாடல் புடவை

ஒன்று வாங்க மறந்துவிடாதீர்கள்

நவீன நாகரீகத்திற் கேற்ற மாதிரியில் புதிதாகச் செய்யப்பட்ட புடவை. அழகான 1-அல்லது $1\frac{1}{2}$ இஞ்சி ஜரிகை வேலைக் கரையுடனும், 6 முதல் 8 அங்குலம் வரையுள்ள ஜரிகை முந்தாணியுடனும் கூடியது. கண்ணைக் கவரும் பிங், ரோஸ், பச்சை, கத்தரிப்பூ, ஊதா, வெள்ளை, ஸ்கைப்புளு முதலிய பல கலர்களில் கிடைக்கும். உடல் அழுத்தமாகவும், நைஸாகவும், பளபளப்பாகவும், நீடித்த உபயோகிப்பிற்கு வரக் கூடியதாயு மிருக்கும்.

16 மு x 44'' புடவை 1-க்கு ரூ. 45 முதல் 80 வரை.

K. S. MUTHIAH & CO.,

EXPORT DEPARTMENT

Post Box 99, - - - MADRAS.

Show room: 287, Esplanade. *Phone: No. 2693.*

Printed at Muthiah Press, Madras and Published by K. S. Sundarar.